658

# திருவெழுகூற்றிருக்கை

(திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது)

**பெரியவாச்சான் பிள்ளை**

அருளின இரண்டு வியாக்கியானங்களும்,
முதல் வியாக்கியானத்தின் அரும்பத விளக்கமும்

*ஸாஹித்ய சிரோமணி*

**ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்கார்**

*வெளியிட்டது*

417x1,3
N50
164353

கம், விக்ருதி, ஆடி

1950

# திருவெழுகூற்றிருக்கை

## ( திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது )

**பெரியவாச்சான் பிள்ளை**

அருளின இரண்டு வியாக்கியானங்களும்,
முதல் வியாக்கியானத்தின் அரும்பத விளக்கமும்

*ஸாஹித்ய சிரோமணி*

**ஸ்தாநீகம் பார்த்தஸாரதி அய்யங்கார்**

*பதிப்பித்தது*

ஸ்ரீரங்கம், விக்ருதி, ஆடி

விலை ] **1950** [ **1** ரூ.

*ஸம்ஸ்க்ருத த்ராவிட ஸாஹித்ய ஸாராஸ்வாத ரஸிகரான ஸ்ரீ சேஷசாயி அவர்கள் தம்முடைய ஷஷ்டி யப்தபூர்த்தி மங்களத்தில் உதவின நூல்.*

164353
அவ:4172,38
N50

1 2 1

1 2 3 2 1

1 2 3 4 3 2 1

1 2 3 4 5 4 3 2 1

1 2 3 4 5 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

குன்றா மது மலர்ச்சோலை
வண்கொடிப் படப்பை* வருபுனல் பொன்னி
மாமணியலைக்கும் *செந்நெலொண் கழனித்
திகழ்வனமுடுத்த* கற்போர் புரிசை
கனகமாளிகை* நிமிர் கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் !! செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை* அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க* ஆடரவமளியில் அறுதுயி
லமர்ந்த பரம ! * நின்னடியிணை பணிவன் ;
வருமிட ரகல மாற்றோ வினையே.

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 5 4 3 2 1

1 2 3 4 5 4 3 2 1

1 2 3 4 3 2 1

1 2 3 2 1

1 2 1

திருக்குடந்தை ஆராவமுதனுக்குத் திருமங்கையாழ்வார் ஸமர்ப்பித்த திருவெழுகூற்றிருக்கைத் தேருக்கு வார்த்தையாலமைந்த தட்டுக்களை எண்களால் கணக்கிடும் விதம்.

# முகவுரை

---

திவ்ய ப்ரபந்த மென்னும் நாலாயிரம் தமிழ்ப் பாட்டுக்களின் பேரில் வியாக்கியானங்கள், உரைகள், அரும்பத விளக்கங்கள், சரித்திரங்கள், ரஹஸ்யங்கள்—விமர்சங்கள்—என்று ஏறக்குறைய இருநூறு வசன நூல்கள் உண்டாயின. இவையெல்லாம் 12 முதல் 17-ம் நூற்றுண்டைச் சேர்ந்தவை. இவற்றுக்கு முன்னும், பின்னும், சமகாலத்திலும் தமிழில் இத்தனை பெரும் பரப்பான வசன நூல் இல்லை.

இந்த வைஷ்ணவத் தமிழில் ஸம்ஸ்கிருதம் அளவு மீறிக் கலந்தது குற்றமேயாயினும், அதில் தமிழ்ச் செல்வமே முற்றிலும் சிறந்தது. இருநூற்றுக்கு மேலான தமிழ் வசன நூல்களில் ஸம்ஸ்கிருதத்துக்குள் மறைந்துகிடக்கும் பழந்தமிழ்ச் சொற்கள் சொற்றொடர்கள், பழமொழிகள், கதைகள், உவமைகள், நகைச் சுவைகள் முதலான பலவும் மேலெழப் பார்ப்போர்க்குப் புலப்படாமலே போகின்றன.

நாலாயிரம் பாட்டுக்களிலும் இருநூறு வசனநூல்களிலுமுள்ள தமிழ்ச் செல்வமனைத்தையும் எளிதாகக் காட்டவல்லதொரு அகராதி தொகுத்து நெடுங்காலமாயிற்று. ஒரு பெருந்தொடரில் பலவேறு பொருள்களைக் காட்டும் சிறு தொடர்களையும் சொற் பிரிவுகளையும் புதுமுறையாக எடுத்து, தமிழின் சொல்வளம் முழுதும் இவ்வகராதியில் விளங்கும். இது தமிழ் வளர்ச்சிக்காரர்களாலும் சர்க்கார் அதிகாரிகளாலும் ஆதரிக்கப்படும் தரமுள்ளது.

இந்த அகராதி இன்னவிதமென்று காட்டும் குறிப்புடன் திருவெழுகூற்றிருக்கை யென்ற சிறு நூலும் அதன் வியாக்கியானங்களும் இப்போது தனியாக வெளியிடப்படுகின்றன. இனிய தமிழின் இயற்கை வசன நடைக்கும் இநத வியாக்கியானங்களே தக்க சான்ருகும். வியாக்கியானத் தமிழில் அதிகமாக வரும் சொற்களின் விவரமும், வடமொழித்தொடரும் இப்புத்தகத்தில் விளங்கும். முழுத்தமிழாயுள்ள வாக்கியங்களைக்கொண்டு பைந் தமிழின் பழைய வசன நடை எளிதில் அறியலாகும்.

தமிழதிகாரி இந்தப் பெருந்தமிழ்ப் புதையலை எடுத்தாள மறுக்காரென்று நம்புகிறேன்.

பழந்தமிழ்ப் பித்தன்

# அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தனியன்கள் ... | 1 |
| 2. | திருவெழுகூற்றிருக்கை ... | 2, 3 |
| 3. | „ கூற்றுக் கணக்கு ... | 4 — 6 |
| 4. | வியாக்கியானங்களும் அரும்பதமும் ... | 7 —23 |
| 5. | திருவெழுகூற்றிருக்கை சுருக்கம்... ... | 33 |
| 6. | திருவெழுகூற்றிருக்கை வாக்யார்த்தம் | 34—36 |
| 7. | திருமங்கையாழ்வார் சரித்திரம் ... | 37, 38 |
| 8. | பெரியவாச்சான் பிள்ளை ... | 39 |
| 9. | பாட்டு வியாக்கியானங்களுக்கு அகராதி | 40—50 |
| 10. | வியாக்கியானச் சொற்களின் சிறப்பு | 51—53 |
| 11. | திருமங்கையாழ்வார் திருவெழுகூற்றிருக்கை... | 54 |
| | திருஞானசம்பந்தர் திருவெழுகூற்றிருக்கை... | 55 |
| 12. | தமிழ்த் திருநாள் ... | 56 |
| 13. | எழுகூற்றிருக்கை இலக்கணம் ... | 57 |
| 14. | வடமொழித் தொடர்கள் ... | 58—60 |
| 15. | ப்ரமாணங்கள் ... | 60 |

ஸ்ரீ:

## திருமங்கையாழ்வார் திருமொழித் தனியன்கள்

---

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாஶாபி: ஆவித்யம் நிஹதம் தம:

வாழி பரகாலன்! வாழி கலிகன்றி!
வாழி குறையலூர் வாழ்வேந்தன்! —வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்
தூயோன் சுடர்மான வேல்.

நெஞ்சுக் கிருள்கடி தீபம்; அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக் கிலக்கியம்; ஆரணசாரம்; பரசமயப்
பஞ்சுக்கனலின் பொறி—பரகாலன் பனுவல்களே.

எங்கள் கதியே! இராமானுச முனியே!
சங்கை கெடுத்தாண்ட தவராசா! —பொங்குபுகழ்
மங்கையர்கோன் ஈன்ற மறையாயிர மனைத்தும்
தங்குமனம் நீ எனக்குத் தா.

---

## திருவெழுகூற்றிருக்கைத் தனியன்

---

[1] சீரார் திருவெழுகூற்றிருக்கை யென்னும் செந்தமிழால்
ஆராவமுதன் குடந்தைப் பிரான்தன் அடியிணைக்கீழ்
ஏரார்மறைப் பொருளெல்லாம் எடுத்திவ்வுல குய்யவே
சோராமற்சொன்ன அருள்மாரிபாதம் துணை நமக்கே.

---

1. இந்தத் தனியனை அநுஸந்திப்ப தில்லை.

ஸ்ரீ:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# திருவெழுகூற்றிருக்கை

---

!! [1] ஒருபேருந்தி [2] இருமலர்த் தவிசில்
[1] ஒருமுறை அயனை ஈன்றனை; * —— [1] ஒருமுறை
[2] இருசுடர் மீதினி லியங்கா * [3] மும்மதி
ளிலங்கை [2] இருகால் வளைய * [1] ஒருசிலை
[1] ஒன்றிய [2] ஈரெயிற் றழல்வாய் வாளியி
லட்டனை; * —— [3] மூவடி [4] நானிலம் வேண்டி *
[3] முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்வினில் * [2] இருபிறப் [1] பொரு மாணாகி *
[1] ஒருமுறை [2] ஈரடி [3] மூவுல களந்தனை; *
[4] நாற்றிசை நடுங்க [5] அஞ்சிறைப் பறவை
ஏறி * [4] நால்வாய் [3] மும்மதத் [2] திருசெவி
[1] ஒருதனி வேழத் தரந்தையை * [1] ஒருநாள்
[2] இருநீர் மடுவுள் தீர்த்தனை; * —— [3] முத்தீ
[4] நான்மறை [5] ஐவகை வேள்வி * [6] அறுதொழி
லந்தணர் வணங்கும் தன்மையை; * —— [5] ஐம்புல
னகத்தினுட் செறுத்து * [4] நான்குட னடக்கி
[3] முக்குணத் [2] திரண்டவை அகற்றி * [1] ஒன்றினில்
[1] ஒன்றிநின்று * ஆங் [2] கிருபிறப் பறுப்போர்
அறியும் தன்மையை; * —— [3] முக்கண் [4] நால்தோள்
[5] ஐவாயரவோடு * [6] ஆறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை; *
[7] ஏழுலகெயிற்றினில் கொண்டனை; * —— கூறிய
[6] அறுசுவைப் பயனு மாயினை; * —— சுடர்விடும்
[5] ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை; * —— சுந்தர
[4] நால்தோள் [3] முன்னீர்வண்ண! * நின் [2] னீரடி
[1] ஒன்றிய மனத்தால் * [1] ஒருமதி முகத்து
மங்கையர் [2] இருவரும் மலரன * அங்கையில்
[3] முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை; *
நெறிமுறை [4] நால்வகை வருணமு மாயினை; *
மேதகு [5] மைம்பெரும் பூதமும் நீயே; *
[6] அறுபத முரலும் கூந்தல் காரணம் *

32. [7] எழ்விடை யடங்கச் செற்றனை ;* —— [6] அறுவகைச்
33. சமயமும் அறிவரு நிலையினை ;* —— [5] ஐம்பா
34. லோதியை ஆகத்திருந்தினை ;* —— அறமுதல்
35. [4] நான் கவையாய் மூர்த்தி [3] மூன்றாய்*
36. [2] இருவகைப் பயனாய் [1] ஒன்றாய் விரிந்து
37. நின்றனை ;*
குன்று மது மலர்ச் சோலை
38. வண்கொடிப் படப்பை* வருபுனல் பொன்னி
39. மாமணி அலைக்கும்* செந்நெலொண் கழனித்
40. திகழ்வன முடுத்த* கற்போர் புரிசை
41. கனகமாளிகை* நிமிர்கொடி விசும்பில்
42. இளம்பிறை துவக்கும்* ‖ செல்வம் மல்குதென்
43. திருக்குடந்தை* அந்தணர் மந்திர மொழியுடன்
44. வணங்க* ஆடர வமளியில் அறிதுயி
45. லமர்ந்த பரம!* நின்னடியிணை பணிவன் ;
46. வருமிட ரகல மாற்றோ வினையே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

[1] இடங்கொண்ட நெஞ்சத்திணங்கிக்
கிடப்பன* என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும்மலர்ந்த
தண்பூங் குடந்தை*
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி
செங்கண் தழலுமிழ்வாய்*
படங்கொண்ட பாம்பணைப்
பள்ளிகொண்டான் திருப்பாதங்களே.

---

1. இது கம்பர் பாடிய தென்பர். ஸ்ரீரங்கத்தில் அத்யாபகர்கள் இந்தப் பாட்டையும் சேர்த்து ஸேவிப்பது வழக்கம்.

1. ஒருபேருந்தி
இருமலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை ; *

2. ஒருமுறை
இருசுடர் மீதினிலியங்கா *
மும்மதி ளிலங்கை
இருகால் வளைய *
ஒருசிலை

3. ஒன்றிய
ஈரெயிற் றழல்வாய் வாளியி னட்டனை ; *
மூவடி
நானிலம் வேண்டி *
முப்புரிநூலொடு மானுரியிலங்கு மார்வினில்
இருபிறப்
பொருமாணாகி *

4. ஒருமுறை
ஈரடி.
மூவுலகளந்தனை ; *
நாற்றிசை நடுங்க
அஞ்சிறைப் பறவை யேறி *
நால்வாய்
மும்மதத்
திருசெவி
ஒருதனி வேழத் தரந்தையை *

5. ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை ; *
முத்தீ
நான்மறை
ஐவகை வேள்வி *

அறுதொழி லந்தணர் வணங்குந் தன்மையை ; *
ஐம்புலனகத்தினுள் செறுத்து *
நான்குடனடக்கி
முக்குணத்
திரண்டவை அகற்றி *
ஒன்றினில்

6. ஒன்றி நின்று * ஆங்
கிருபிறப் பறுப்போர் அறியும் தன்மையை ; *
முக்கண்
நால்தோள்
ஐவாயரவோடு *
ஆறுபொதி சடையோன் அறிவரும் தன்மைப்
[பெருமையுள் நின்றனை ; *
ஏழுல கெயிற்றினில் கொண்டனை ; * —— கூறிய
அறுசுவைப் பயனு மாயினை ; * —— சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை ; * —— சுந்தர
நால்தோள்
முன்னீர்வண்ண ! * நின்
னீரடி
ஒன்றிய மனத்தால் *

7. ஒருமதி முகத்து மங்கையர்
இருவரும் மலரன * அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயி லமர்ந்தனை ; *
[நெறிமுறை
நால்வகை வருணமு மாயினை ; * —— மேதகும்
ஐம்பெரும் பூதமும் நீயே ; *
அறுபதமுரலும் கூந்தல் காரணம் *
ஏழ்விடை அடங்கச் செற்றனை ; *
அறுவகைச் சமயமும் அறிவருநிலையினை ; *
ஐம்பா லோதியை ஆகத்திருத்தினை ; * —— அறமுதல்
நான்கவையாய் மூர்த்தி

மூன்றாய் *
இருவகைப் பயனாய்
ஒன்றாய் விரிந்து நின்றனை ; *

குன்றுமதுமலர்ச்சோலை
வண்கொடிப் படப்பை * வருபுனல் பொன்னி
மாமணி அலைக்கும் * செந்நெலொண் கழனித்
திகழ்வன முடுத்த * கற்போர் புரிசை
கனகமாளிகை * நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் * !! செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை * அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க * ஆடரவமளியில் அறிதுயி
லமர்ந்த பரம ! * நின்னடியிணை பணிவன் :
வருமிடரகல மாற்றோ வினையே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

# திருவெழுகூற்றிருக்கை முதல் வ்யாக்யாநம்

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதர: ஸதா

—பெரியவாச்சான் பிள்ளை தனியன்

## முதல் அவதாரிகை

ஸம்ஸார ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார் அதுக்கு (அந்த அவஸாதத்துக்கு)ப் பரிஹாரமாக அவன் குணங்களை நெஞ்சாலே நினைத்தும், வாயாலே பேசியும், திருவடிகளிலே விழுந்தும் தரித்தார்.

—"நீர் இங்ஙனே கிடந்து நோவுபடுகிறீர். உமக்குத் தான் செய்யவேண்டுவதென்?" —என்று கேட்க,

—"த்வதநுபவ விரோதியாயிருக்கிற ஸம்ஸாரத்தை வாஸனையோடே போக்கித் தரவேணும்." —என்றார்.

—"அது பின்னை நம்மால் செய்யலாவதன்றே!" —என்ன,

—"உன்னை யொழிந்த ஸகலபதார்த்தங்களினுடைய உத்பத்தி என்ன, ரக்ஷணமென்ன—இவற்றுக்குக் கடவையாய், ஸர்வஸமாஶ்ரயணீயனாய், ஆபத்ஸகனாயிருக்கிற நீயே என்னுடைய ஸம்ஸார து:கத்தைக் கழித்துத் தருமித்தனையல்லது, என்னால் கழித்துக்கொள்ளப் போகாது." —என்று திருவடிகளிலே விழுந்து தம் தசையை அறிவிக்கிறாராயிருக்கிறது (இந்த ப்ரபந்தம்).

ஆழ்வார்க்கு, முதலிலே செப்பேட்டைக் கையிலே கொடுத்து நிதியைக் காட்டிக் கொடுப்பாரைப்போலே, (எம்பெருமான்) திருமந்த்ரத்தையும் அதில் அர்த்தத்துக்கு

எல்லை நிலமாகக் கோயில்களையும் காட்டிக்கொடுக்க, (அவர்) கண்டு க்ருதார்த்தராய் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் ஒக்க மறந்தார். (திருமொழியிலே).

ஆழ்வாரைப் பார்த்து எம்பெருமான், —"நீர் இருக்கிறது ஸம்ஸாரத்திலே கிடீர்!"—என்று அருளிச்செய்ய, அதின் கொடுமையை அநுஸந்தித்து ஆற்றாமையாலே, மநோவாக்காயங்களாலே எம்பெருமானை அநுபவித்து ஆற்றப்பார்த்தார் (திருக்குறுந்தாண்டகத்திலே).

அது பண்டையிலும் இரட்டியாய், மிகவும் ஆற்றாமையாலே எம்பெருமானுடைய சரண்யத்வத்தைப் பேசிக்கொண்டு, அதுக்கு எல்லைநிலமான திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வார் திருவடிகளையே எத்தசைக்கும், இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்டநிவாரணத்துக்கும் உபாயமாகப் பற்றி முடிக்கிறார் (திருவெழுகூற்றிருக்கையை).

---

## அரும்பத விளக்கம்

ப்ரவேசே—திருமொழியில் உகந்தருளின நிலங்களையும் அனுபவித்து, பரமபதத்தையும் ஸம்ஸாரஸ்வபாவத்தையும் மறந்திருக்க, "நீர் இருக்கிறது ஸம்ஸாரம் கிடீர்!"—என்று "மாற்றமுள"விலே (பெ. தி. மொ. 11-8) காட்ட, ப்ரதிகோடியை அநுஸந்தித்து வந்த ஆற்றாமையாலே "வாக்கினால் கருமந் தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால்" (தி. கு. தா. 4) என்று திருக்குறுந்தாண்டகத்திலே கரணத்ரயத்தாலும் அநுபவித்து தரிக்கப்புக, அதில் தரிக்கப்போகாமையாலே இதிலே (திருவெழுகூற்றிருக்கையிலே) சரணம் புகுகிறாரென்றபடி.

விபூதித்வயத்தையும் மறந்து, த்ருதீய விபூதியான திவ்ய தேசங்களை அநுபவித்திருக்கிற இவர்க்கு ஈஶ்வரன் ஸம்ஸாரத்தில் கொடுமையைக் காட்டுவானென் என்னில்,—இவ்வநுபவம் அவிச்சிந்நமாகவேணு மென்று நினைத்து, அது அங்கே ஒழியக்கூடாமையாலே, (பரமபதத்திலே யன்றிக் கூடாமையாலே) ஆமத்தை அறுத்து, பசியை விளைப்பித்து சோறிடுவாரைப்போலே, விடாயைப் பிறப்பித்து அங்கே (பரமபதத்திலே) கொடுபோகைக்காகக் காட்டினானென்று சங்காபரிஹாரங்கள் கண்டுகொள்வது.

ஸ்ரீ:

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

# இரண்டாவது வ்யாக்யாநம்

---

## இரண்டாவது அவதாரிகை

முதலிலே கரணகளேபரவிதுரமாய், தமோபூதமாய், அவிஜ்ஞேயஸ்வரூபமாய், அசித்கல்பமாயிருக்கிற இவற்றை (ஆத்மாக்களை) அர்த்தித்வாதி நிரபேக்ஷமாக உன்னுடைய நிரவதிகதயையாலே உண்டாக்கின நீயே அருளிக் கடாக்ஷியாயாகில், [1]"அஜூநி புவநாநி பவிதும் நாலம்" (ஸ்தோ. ர. 10) முதலிலே இவை உண்டாகவே மாட்டாது; ஸத்தையே தொடங்கி உன்னதீநமான பின்பு, உன்னை யொழிய இவற்றுக்கு ஒரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கூடா தென்னுமிடம் சொல்லவேணுமோ! இது இல்லாத வன்று உண்டாக்கின நீயே இதுக்கொரு போக்கடி பார்க்கையொழிய நானொன்று செய்து உன்னைப் பெறுகை யென்று ஒருபொருளுண்டோ!

[2]"சரணமறை பயந்த" (மு. தி. 60) — இத்யாதி. ஜ்ஞாநாதிகனான சதுர்முகனோடேகூட உத்பத்தி விநாசாதி களுக்கு கர்மீபவிக்கிற ஸகல சேதநர்க்கும் ரக்ஷையென்று பேர் பெற்றவை யெல்லாம் "நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே ஆஸ்ரிதவிரோதி நிரஸநத்துக்காக

---

1. நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி
   நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி:
   ஏவம் நிஸர்கஸுஹ்ருதி த்வயி ஸர்வஜந்தோ:
   ஸ்வாமிந் ந சித்ரமிதமாஸ்ரிதவத்ஸலத்வம்
   —(ஸ்தோ. ர. 10)

2. சரண மறைபயந்த தாமரையா னோடு
   மரணய மன்னுயிர்கட் கெல்லாம்—அரணய
   பேராழி கொண்ட பிரானன்றி மற்றறியாது
   ஓராழி சூழ்ந்த உலகு. —(மு. தி. 60)

கையிலே திருவாழியை தரித்துக்கொண்டிருக்கிற உபகாரகனான அவன் பார்க்கில் பார்க்கு மித்தனை யல்லது, வேறு கடல்சூழ்ந்த பூமியிலுள்ள சேதநர்—தங்களுக்கு ரக்ஷை தாங்கள் அறியார்கள்.

அவனையொழிய இவை அறியாதொழிய வேண்டுகிற தென்னென்னில், [1] "நைவ கிஞ்சித்" இத்யாதி.

உனக்குப் பரோக்ஷமாயிருப்பதொன்றில்லை. எத்தனையேனும் ஜ்ஞாநாதிகராயிருப்பார்க்கும் நீ கண்ணுக்கு விஷயமாகாய். உனக்கு கைபுகுராததொன்று மில்லை. எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநர்க்கும் நீ கைபுகுந்தாயாய் இராய்.

இத்தால் சொல்லிற்றாயிற்ற தென்னென்றால்,—ஒருவனுக்கு கண்ணும் தோற்றாதே காலும் நடைதாராதே இருப்பது; ஒருவனுக்கு கண்ணும் தோற்றி காலும் நடைதருவது. இப்படியிருந்தால், ஆர் வழிகாட்டிக் கொடுபோவார்? நான் அஜ்ஞனாய் அசக்தனாயிருந்தேன். நீ ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாயிருந்தாய். இங்ஙனே இருந்த பின்பு, நீ என் கார்யம் செய்து தலைக்கட்டு மித்தனை போக்கி, நான் என் கார்யம் செய்து தலைக்கட்டுகை யென்று ஒருபொருளுண்டோ? நீ தந்த ஜ்ஞாநம்கொண்டு அறியப்பார்த்தாலும், அறிந்தபடி செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான சக்தி எனக்குண்டோ!—என்கிறார்.

---

1. நைவ கிஞ்சித்பரோக்ஷம் தே ப்ரத்யக்ஷோஸி ந கஸ்யசித்
நைவ கிஞ்சிதஸித்தம் தே நச ஸித்தோஸி கஸ்யசித்
—(ஜிதம் தே—1. 6)

மூ. வ்யா.—ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் அத்விதீயகாரணமாய், அதுக்குத் தக்க பரப்பையுடைய திருநாபியிலே அப்பரப்படங்கலும் கண் செறியிட்டாற் போலே பெருத்திருக்கிற மலராகிற ஆஸநத்திலே ஒருகால் இதர விஸஜாதீய ஜந்மாவான சதுர்முகனை உண்டாக்கினாய். ஒருகால் என்றாலும், ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்குமிறே. "நாவேக்ஷஸே" (ஸ்தோ. ர. 10).

ஒருபேருந்தி இத்யாதி. ஜகத்து ப்ரளயம் கொண்ட காலத்து, உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே இவற்றினுடைய ஸத்தையை உண்டாக்கினவனே!

(ஒருபேருந்தி) ப்ரதாநமாய் ஆத்யமாயிருந்த திருநாபியிலே. (இருமலர்த் தவிசில்) பெரிய தாமரைப் பூவின் அல்லியிலே.

---

அரு. — (ஒருபேருந்தி)—மூந்தினதுமாய், அதுதான் பழையதுமாயிருக்கை. (தவிசில்)—அல்லியாய் இதனைச் சொல்லுகிறது.

---

இ.வ்யா.—ஒருபேரித்யாதி. நாமரூபவிபாகாநர்ஹமாய் தன்னோடு அவிபக்தமா யிருக்கிற இத்தை (ப்ரபஞ்சத்தை) விபக்தமாக்கி, தமப்ஶப்தத்துக்கு வாச்யமாக்கி, அநந்தரம் ஸூக்ஷ்மரூபேண, அக்ஷரம் அவ்யக்தம்—என்கிற அவஸ்தைகளைப் பிறப்பித்து, பின்னை மஹாநாக்கி, அஹங்காரமாக்கி, தந்மாத்ரைகளாக்கி, பூதங்களாக்கி, பௌதிகமான [1] வர்ணஸ்ருஷ்டியளவும் வரப்பண்ணி, பின்னை அவ்வருகுண்டான தேவாதிகார்யங்களை அடங்கலும் அவன் முகத்தாலே பண்ணுவதாக முதலில் சதுர்முகனை உண்டாக்கினாயிற்று. முன்புள்ளவை யெல்லாம் தானே கைதொட்டுச் செய்து, பின்பு சதுர்முகனை அதிஷ்டித்து நின்று செய்வானாகப் பார்த்தான். முன்பு அசித்தைக் கொண்டு கார்யம் கொண்டதோடு, இவனை (ப்ரஹ்மாவை)க் கொண்டு கார்யம் கொள்ளப் பார்த்ததோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவனுக்கு பாரதந்த்ர்யத்தில் வந்தால் இவனுக்கும் (ப்ரஹ்மாவுக்கும்) அசித்ஸாம்யம் உண்டு.

---

1. "(வர்ணம்)—மண்டலமாய் அண்டம் என்றபடி".

ஒரு முறை அயனை ஈன்றனை ; * ஒரு முறை
இருசுடர் மீதினி லியங்கா * மும்மதி

---

(ஒருமுறை அயனை ஈன்றனை) — ஒருகால் ஜகத் ஸ்ருஷ்டிக்கு அடியாக ப்ரஹ்மாவை உண்டாக்கினாய். இவற்றினுடைய (ஆத்மாக்களினுடைய) ஸத்தாதிகளை முதலிலே உண்டாக்கின உனக்கே பரமன்றோ எல்லா ரக்ஷையு மென்கிறார். நீ உண்டாக்கின இதுக்கு (ஆத்மாவுக்கு) ஒரு குணம் பிறப்பிக்க அரிதோ!

ஒருமுறை—தான் உண்டாக்கின பயிருக்குக் களை பரிப்பானும் தானேயானாற்போலே, ஸ்ருஷ்டமான ஜகத்தை அழிவுசெய்யும் ராக்ஷஸரை நிரஸிப்பானும் தானே.

(ஒருமுறை) ஒரு பர்யாயம், (இருசுடர்) சந்த்ராதித்யர்கள், (மீதினியங்கா) மேலே ஸஞ்சரிக்க பயப்படும்படியாய்,

(மும்மதிள்)—கிரிதுர்க்கம், ஜலதுர்க்கம், வநதுர்க்கம் என்கிற மூன்றையு முடைத்தான,

---

சேதநரான வாசியில் பெறுகிற ஏற்றம் கார்யத்துக்குக் கடவான் அவனே (ப்ரஹ்மாவே) என்று அறுதியிட்டிருக்கையாயிற்று.

(ஒருபேருந்தி) இத்யாதிக்குக் கருத்து. இல்லாதத்தை உண்டாக்கின உனக்கு உள்ளதுக்கு ஒரு குணாதாநம் பண்ணுகை அரிதோ—என்கை.

இ. வ்யா.—ஒருமுறை இத்யாதி. பிரிவுக்கு ஹேதுபூதனான ராவணனை அழியச்செய்தாள் பிராட்டியோ? நீயன்றோ!

ஒருகால் சந்த்ராதித்யர்களுங்கூட மேலே ஸஞ்சரிக்கவும் அஞ்சும்படியாய் காட்டரண், மலையரண், நீரரண் என்கிற மூவகைப்பட்ட அரணை உடைத்தாயிருக்கிற லங்கையை,

ளிலங்கை இருகால் வளைய * ஒருசிலை
ஒன்றிய ஈரெயி ற்றழல்வாய் வாளியி
னட்டனை ; *

(இலங்கை)—நினைத்தார்க்கு அஞ்சவேண்டும்படியான ராக்ஷஸர், குளவிக்கூடு சேர்ந்தாற்போலே சேர்ந்து, அம்மணக் கூத்தடிக்கும் தேசம்.

(இருகால் வளைய ஒருசிலை ஒன்றிய ஈரெயி ற்றழல்வாய் வாளியிலட்டனை)—இரண்டு கோடியும் வளைந்து நிற்கும் ப்ரதாநமான ஸ்ரீ சார்ங்கத்திலே பொருந்தி, இரண்டு எயிற்றையும் உடைத்தாய் நெருப்பை உமிழாநின்றுள்ள சரத்தாலே சுட்டுப் பொகட்டாய்.

அரு.—(ஈரெயிறு) பிறை வாய்ப்பு. (பிறைச்சந்திரன் போலே இருக்கை. அம்பின் அடிப்புறம் பிறைவாய்ப்பு. நுனி கூர்வாய்ப்பு.)

(வாளியிலட்டனை) — ப்ரஹ்மஸ்ருஷ்டியைப்போலன்றியே பத்தும் பத்தாக அம்பால் எதிர்த்து, பிராட்டியினுடைய ஸம்ஶ்லேஷ விரோதியைப் போக்கினாற்போலே, என்னுடைய விரோதிகளையும் போக்கவேணு மென்று கருத்து.

வில்லினுடைய கோடித்வயமும் வளையும்படி அத்விதீயமான ஸ்ரீசார்ங்கத்திலே பூட்டப்பட்டு, இரண்டு எயிற்றையுமுடைத்தாய், தொடுக்கும்போது அம்பாய், எதிரிகள் மேலே தைக்கும்போது நெருப்பாய்த் தைக்கும் அம்பாலே முடித்தாய்.

(வாளியிலட்டனை) ப்ரஹ்மஸ்ருஷ்டிபோலே ஸங்கல்பத்தாலே செய்கையன்றிக்கே, நேர்கொடுநேரே பூசலிலே நின்று அழியச் செய்தாய்.

[1] "அடைந்த" (மு. தி. 59) இத்யாதி. இவ்வாத்மாவுக்கு அவித்யாதிகள் ஸ்வதஸ்ஸித்தமல்ல. அய:பிண்டத்

தையும் அக்நியையும் சேர்த்துவைத்தால் அந்யோந்ய ஸம்யோகத்தாலே அதினுடைய பரமாணுக்கள் ஸூக்ஷ்ம ரூபேண அசித்திலே வந்து ஸங்க்ரமிக்கையினாலேயாதல், அன்றிக்கே-அதினுடைய குணத்தை பஜிக்கையினாலே யாதல், அதினுடைய ஔஜ்ஜ்வல்யத்தையும் வர்ணத்தையும் உடைத்தாயிருக்குமாபோலே, நித்யமான ஆத்மவஸ்து அநாதியாயுள்ள அசித்ஸம்யோகத்தாலே அந்த அசித்திலே அஹமபிமாநத்தைப் பண்ணும்படி பலிக்கிற அவித்யா, கர்ம, வாஸநா ருசிகள், அவையடியாகப் பரிக்ரஹித்த சரீரத்தைப்பற்றி வரக்கடவதான ஆதி, வ்யாதி, நிஷித்தாநுஷ்டாநம்—இப்படிக் கார்யமாயும் அடிகாணவொண்ணாதபடி கிடக்கிறவை, புதுப்புடவையை அழுக்குக் கழற்றுமா போலே க்ரமத்தாலே போக்கையன்றிக்கே, ஒருகாலே ஸவாஸநமாகப் போக்க வேண்டில், அதுக்குச் செய்ய வேண்டுவதென்னென்ன,—

[1] நுடங்கிடையை இத்யாதி. ப்ரபல ப்ரதிபந்தகங்களை வருத்தமறப் போக்க வல்லவனைப்பற்ற அடுக்கும். நுடங்கிடையை—கண்டார்க்கு என்னாய் விளையக்கடவதோ என்று அஞ்சவேண்டும்படியான ஸௌகுமார்யத்தை உடைத்தான இடையை உடையவளைக் கிடீர் பிரித்து வைத்ததென்கை.

முன்பு லங்கையிலே கொடுபுக்கு சிறைவைத்த ராவணன் மிடுக்கழியும்படியாக மேகத்திலே மின்னினாற்போலே அழகிய திருக்கையிலே ஸ்ரீசார்ங்கத்தை வைத்தவன். எதிரிகளை அழியச்செய்கைக்கு ஒரு வ்யாபாரம் பண்ண வேண்டா; கையிலே வில்லை வாங்க (எடுக்க) அமையும்.

1. அடைந்த அருவினையோடு அல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்வி லங்கைவைத்தான் சரண். —(மு. தி. 59)

மூவடி நானிலம் வேண்டி *
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு

மு. வ்யா.—மூவடி இத்யாதி. அம்பாலே ஸாதிக்க வொண்ணாதஇடம் அழகாலே ஸாதித்தபடி சொல்லுகிறது.

(மூவடி நானிலம் வேண்டி) நாலுவகைப்பட்ட பூமியிலே மூவடியை வேண்டி.

(முப்புரி இத்யாதி). ஒரு காளமேகத்திலே மின்னலை எறிட்டாற்போலே திருயஜ்ஞோபவீதமும் அத்தோடே கூடின க்ருஷ்ணாஜிநமும் விளங்காநின்ற திருமார்வையுடையையாய்,

அழகிய திருக்கையிலே வில்லைப் பிடித்தவன் உபாயமென்னுதல்; அவனை உபாயமாகப்பற்றுங்கோள் என்று விதியாதல்.

நடங்கிடையை முன்னிலங்கை வைத்தான்—என்றதுக்குக் கருத்தென் என்னில், ஈஶ்வரசேஷமான ஆத்மவஸ்துவை என்னதென்று இருக்கையாவது பிராட்டியைப் பிரித்த ராவணனோடு ஒக்குமென்கை.

தன்னைப்பற்றினார்க்கு, அவள் விரோதியைப் போக்கினாற்போலே, விரோதியைப் போக்கிக் கொடுக்குமென்கை. அவளோடொத்த ப்ராப்தியும் அவன் பக்கல் இவனுக்கு (ஆஶ்ரயிக்கிறவனுக்கு) உண்டென்பதையும் அவனைப்பற்றுவார் அவள் முன்னாகப் பற்றுவதென்கையும்; பிராட்டியோட்டை கலவிக்கு விரோதியான ராவணனை அழியச்செய்த உனக்கு என்னுடைய ப்ரதிபந்தகம் போக்குகை அரிதோ என்கையும் (கருத்து).

இ. வ்யா.—(மூவடி நானிலம் வேண்டி) ஈரடியாலே பூமியை அளந்து, ஓரடிக்கு அவனை (மஹாபலியை)ச் சிறையிட்டுவைக்க நினைத்து மூன்றடியை இரந்தானாயிற்று.

அம்பால் அழிக்கவொண்ணாத இடத்தை அழகாலும் இரப்பாலும் அழியச்செய்தபடி. ப்ரயோஜநாந்தரபரரான இந்த்ராதிகளுடைய கார்யம் செய்த நீ உன்னையே ப்ரயோஜநமாக நினைத்திருக்கிறவன் கார்யம் செய்யலாகாதோ!

மார்வினில் * இருபிறப் பொரு மாணுகி *

(இருபிறப்பு) த்விஜனுமாய்,

(ஒருமாணுகி) ஒப்பில்லாத ஸ்ரீவாமநனுய், தானே இன்னும் ஒருகால் இவ்வடிவு கொள்ளவேணு மென்னிலும் இப்படி வாயாத வடிவை உடையனுய்,

நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என்ருற்போலே சொல்லுகிற அன்னலும் துன்னலுமான பூமியை அர்த்தித்து. இந்நாலிலும் ருஜீஷாம்சமாய்க் கழிந்தது பாலைநிலமென்று சொல்லுவர்கள். இவர்க்கு அபிமதம் நாலுமென்னுமிடம் தோற்றியிருந்ததிறே.

இ.வ்யா.—மேகத்திலே மின்னிறை போலே சாத்தின யஜ்ஞோபவீதமும், க்ருஷ்ணாஜிநமும் விளங்காநின்றுள்ள திருமார்வை உடையயாய், உபநயநம் பண்ணின புதுமை தோற்றும்படி இருப்பாயுமாய், இந்த்ரனுடைய அர்த்தித்வம் தலைக்கட்டுகைக்காக இட்டபோதோடு இடாதபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலே தகணேறின வாமந வேஷத்தைப் பரிக்ரஹித்து, ஒருகால் த்ரைலோக்யத்தையும் ஈரடியாலே அளந்துகொண்டாய்.

ஆசையில்லாதார் தலைமேலே வைக்கும் திருவடிகளை ஆசையுடைய என் தலையிலேயும் வைக்கலாகாதோ! இந்த்ரனைப்போலே கழஞ்சுமண் பெறுதல், மஹாபலியைப் போலே ஔதார்யம் கொண்டாடுதல் செய்ய இருக்கிறேனே நான்? உன்னைப் பெறவேணு மென்றன்றோ நான் அர்த்திக்கிறது? உன்னை வைத்து வேறென்றை (ராஜ்யத்தை) இரந்தார்க்கோ (இந்த்ராதிகளுக்காகவோ) நீ இரப்பாளனுய் கார்யம் செய்வது! உன்னை யிரந்தார் கார்யம் செய்யலாகாதோ! [1] "மதீய மூர்த்தாநமலங்கரிஷ்யதி கதா" என்றிறே நான் இருப்பது.

1. "கதா புந: ஶங்க ரதாங்க கல்பக
த்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநம்
த்ரிவிக்ரம! த்வச்சரணாம்புஜத்வயம்
மதீய மூர்த்தாநமலங்கரிஷ்யதி" (ஸ்தோ. ர. 31)

ஒருமுறை ஈரடி மூவுல களந்தனை ;*

1-(ஒருமுறை யீரடி மூவுல களந்தனை) ஒருகால் இரண்டடியாலே மூன்று லோகத்தையும் அளந்து கொண்டாய்.

இத்தால், இந்த்ரனுக்கு ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தாற்போலே, என்னுடைய சேஷத்வத்தையும் மீட்டுத் தந்தருள வேணும் என்கிறார்.

ஈட்டங்கொள் தேவர்கள் சென்றிரந்தார்க் கிடர்நீக்கிய
கோட்டங்கை வாமனனாய்.........(திருவாய் 7. 5. 6)

என்று உன்னை இரந்தா ரிரப்புக்கு நீயும் இரந்து அவர்களபேக்ஷிதம் பாரிக்கு மவனல்லையோ !

இசையாதார் தலைகளில் வைத்த திருவடிகளை இசைந்த என் தலையில் வைத்தாலாகாதோ ! ப்ரயோஜநாந்தரபரனுடைய இழவு தீர்த்த உனக்கு அநந்யப்ரயோஜநனன என்னுடைய இழவு தீர்க்கலாகாதோ ! இந்த்ரன் கழஞ்சு மண்ணன்றோ இழந்தது ! நான் என்னையும் உன்னையுமன்றோ இழந்தது !

நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை ஏறி *

மூ. வ்யா.—பெருமதிப்பரான இந்த்ராதிகளுக்கேயோ அபேக்ஷிதம் செய்தது என்னில், அன்று. ஆபத்தும் விஸ்வாஸமும் என்கிறது அல்பமுண்டானால் தண்ணியரான திர்யக்குகளுக்கும் (அவன்) அபேக்ஷிதம் செய்யுமென்கிறது.

(நாற்றிசை நடுங்க) ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய ஆபத்தை நினைத்து நீ கலங்கின கலக்கத்தைக் கண்டு, ஜகத்துக்கு என்ன மிறுக்குப் புகுகிறதோ என்று அறியாதே நடுங்க,

(அஞ்சிறைப் பறவை ஏறி) மிக்க அழகையும் வேகத்தையும் உடைத்தான சிறகையுடைய பெரிய திருவடிமேலே ஏறி.

இ. வ்யா. — பெருமதிப்பரான இந்த்ராதிகளுக்காக உன்னை அழிய மாறிக் கார்யம் செய்தவளவேயோ! ஜன்ம வ்ருத்தாதிகளால் குறைய நின்ற ஆனை இடர்ப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்தவனன்றோ!

ஜகத்ஸ்ருஷ்டியாதிகளுக்கும் ஸங்கல்பித்ததுக்கு அவ்வருகுண்டென்று அறியாமையாலே ஜகதுபஸம்ஹாரத்துக்கும் அவ்வருகாயிருந்ததீ! இதொரு சீற்றம் இருந்தபடியென்!—என்று இருந்ததே குடியாக எல்லாரும் அஞ்சும்படியாக மேருவைக்கினிய மேகம்போலே அழகிய சிறகையுடைய பெரிய திருவடி திருத்தோளிலே ஏறிப் பெரிய வேகத்தோடே.

நால்வாய் மும்மதத் திருசெவி

ஒருதனி வேழத் தரந்தையை *

மு. வ்யா.—நாலாநின்ற வாயையும் மூன்று மதத்தையும், இரண்டு செவியையும் உடைத்தாய் வேறு துணையின்றிக்கே தன் மிடுக்கற்று நின்ற ஆனையினுடைய மஹா து:கத்தை. அரந்தை-து:கம்.

அரு.—(அரந்தை) அரதி: து:கம். (மும்மதம்) கபோல மேட்ர ஸ்தலத்ரயம். (கபோலம் கன்னம் இரண்டும், மேட்ரஸ்தலம் ஆண்குறி ஒன்றும் ஆக மூன்று).

இ. வ்யா.—நாலா நின்றுள்ள வாயை உடைத்தாய் மூன்று வகைப்பட்ட மதத்தை உடைத்தாய், இரண்டு செவியை உடைத்தாய், வேறு துணையின்றிக்கே அத்விதீயமாயிருக்கிற ஆனையினுடைய து:கத்தை அத்தசையிலே வேற்று நிலமாய் மிக்க வெள்ளத்தை உடைத்தான மடுவிலே அரை குலையத் தலை குலைய வந்து விழுந்து போக்கினாய்.

க்ராஹக்ரஸ்தம் கஜேந்த்ரஞ்ச தம் க்ராஹஞ்ச ஜலாசயாத்
உஜ்ஜஹார ப்ரமேயாத்மா தரஸா மதுஸூதந:
ஸ்தலஸ்தம் தாரயாமாஸ க்ராஹம் சக்ரேண மாதவ:
—வி. த. 69 அத்: 79, 80

மடுவிலே போய்ப்புக்கு ஆனையையும் முதலையையுமாக அணைத்துக்கொண்டு போந்து, கரையிலே ஏறி, ஆனைக்கு நலிவு வாராதபடி திருவாழியாலே முதலையைக் கீறிப் பொகட்டானாயிற்று. "ராஜபுத்ரனோடு வினையுண்ட கைக்கூட்டனுக்கும் பால்திரளை இடக்கடவது காண்!" என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

நால்வாய் மும்மதத் திருசெவி ஒருதனி வேழம்—என்றாற்போலே சொல்லுவதுக்குக் கருத்தென்னென்னில், ப்ரஜை கிணற்றில் விழுந்தால்,—"காதும் கண்ட வாளியும், காலும் தலையும் வடிவும் இருந்தபடி காண்!"—என்பாரைப் போலே, இடர்ப்பட்ட இதினுடைய அவயவங்களை அவனுக்கு (ஸர்வேஶ்வரனுக்கு) ஆகர்ஷகமானபடியாலே சொல்லுகிறது.

(வேழத்தாரந்தையை) எளியராயிருப்பார் நோவு பட்டாற்போலன்றிறே இதினுடைய நோவுபாடு.

"பரமாபதமாபந்ந:"—

ஸர்வேஶ்வரன் தன்னைப் பேணாதே வந்து விழ வேண்டும்படி கரைபுரண்ட ஆபத்தாயிற்று. இவ் வாபத்துக்கு அவதி என்னென்னில்,

"மநஸா சிந்தயத்"—வாயால் கூப்பிடுமது ஒழிற்று (ஓய்ந்தது).

ஒருநாள்

இருநீர் மடுவுள் தீர்த்தனை; *

மு. வ்யா.—அத்தசையிலே வேற்றுநிலமாய் பெரிய நீர்வெள்ளமான மடுவிலே தீர்த்தாய்.

முதலையின் வாயிலே நின்றும் ஆனையை மீட்டாற் போலே ஸம்ஸாரம் கொண்ட என்னையும் மீட்கவேணு மென்கிறார்.

கஜ ஆகர்ஷதே தீரே ; க்ராஹ ஆகர்ஷதே ஜலே
தயோர்த்வந்த்வ ஸமம் யுத்தம் திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்

பரமாபதமாபந்நோ மநஸா சிந்தயத்தரிம்
ஸது நாகவர: ஸ்ரீமாந் நாராயணபராயண: —47
—(வி. த. அத். 69)

என்று, ஆனைக்கு முதலை ஒன்று; எனக்கு முதலை ஐந்து (பஞ்சேந்திரியங்கள்); அது மிடுக்கனான யானை; நான் துர்பலன் என்கிறார்.

இ. வ்யா. — அங்கு காலம் அளவுபட்டிருக்கும்; முதலை ஒன்று; தான் ஆனை. இங்கோ என்றால்,—காலம் அநாதி; இந்த்ரியங்கள் ஐந்து; நானோ துர்பலன். ஆனால் (ஆகையால்) வாசி பார்த்துத் தரவேண்டாவோ!

காலைக் கதுவிடுகின்ற கயலொடு வாளை விரவி
வேலைப் பிடித்தென்னை மார்களோட்டிலென்ன
விளையாட்டோ!
கோலச் சிற்றாடை பலவுங்கொண்டு நீயேறி யிராதே
கோலங்கரிய பிரானே! குருந்திடைக் கூறைபணியாய்
—(நாச். தி. 3, 5)

என்று ஆந்தராளிகர் (முமுக்ஷுக்கள்) குடியிலே பிறந்து ஈஶ்வர மர்மஜ்ஞையாயிருப்பா ளொருத்தி வார்த்தை. ஒரு நீர்ப்புழு நலியப் பொறுக்கமாட்டாதவன் நீ. (கய லொடு வாளை என்று) இரண்டு கிடாய் (என்) காலைப்பற்றி நலிகிற தென்கிறாள்.

முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி * அறுதொழி
லந்தணர் வணங்குந் தன்மையை *

மு. வ்யா.—உபாயாந்தர நிஷ்ட்டர்க்கும் அவற்றை (உபாயாந்தரங்களை) நடத்திக்கொடுப்புதியிறே. "யோகோ யோகவிதாம் நேதா" (ஸஹஸ்ரநாமம் 3) என்கிறபடியே.

(முத்தீ) மூன்று பிள்ளையைப் பெறுவாரைப்போலே கார்ஹபத்ய ஆவஹநீய தக்ஷிணாக்நிகளையும்,

(நான்மறை) ருக் யஜுஸ் ஸாம அதர்வணங்களையும் உடையராய்,

(ஐவகை வேள்வி) தேவயஜ்ஞ:, பித்ரு யஜ்ஞ:, பூத யஜ்ஞ:, மநுஷ்ய யஜ்ஞ, ப்ரஹ்ம யஜ்ஞ: என்று பஞ்ச மஹா யஜ்ஞங்களையும். இத்தால் கர்மயோகம் சொல்லிற்று.

(அறுதொழில்) யஜநம் யாஜநம், அத்யயநம் அத்யாபநம், தாநம் ப்ரதிக்ரஹம் என்கிற ஷட்கர்மங்களையும் உடையரான,

(அந்தணர் வணங்குந் தன்மையை) அநந்ய ப்ரயோஜநரான ப்ராஹ்மணராலே ஆஶ்ரயிக்கப்படும் ஸ்வபாவத்தை உடையையாய்.

இ. வ்யா.—முத்தீ இத்யாதி. வர்ணங்களில் உத்க்ருஷ்ட வர்ணமாய் நல்வழி போகக் கடவதாயிருக்கும் ப்ராஹ்மணஜாதிக்கடைய ஆஶ்ரயணீயனாயிருக்கும்படியைச் சொல்லுகிறது.

மூன்று பிள்ளையைப் பெற்ற தாயைப்போலே, ஆவஹநீய, கார்ஹபத்ய, தக்ஷிணாக்நி என்கிற அக்நித்ரயமும், நாலு வகைப்பட்ட வேதங்களும், பஞ்சமஹா யஜ்ஞமும், அத்யயநம் பண்ணுகை பண்ணுவிக்கை, யஜிக்கை யஜிப்பிக்கை, தாநம் பண்ணுகை கொள்ளுகை, —என்றாற்போலே சொல்லுகிற இவற்றைத் தொழிலாக உடையரான ப்ராஹ்மணர்க்கு ஆஶ்ரயணீயனாயிருக்கும் படி சொல்லிற்று.

ஐம்புல
னகத்தினுட் செறுத்து * நான்குடனடக்கி
முக்குணத் திரண்டவை அகற்றி * ஒன்றினில்
ஒன்றிநின்று * ஆங்கிருபிறப் பறுப்போர்
அறியுந் தன்மையை *

மு. வ்யா.—(ஐம்புலனித்யாதி) கர்மயோகத்தை அங்கமாக உடைத்தான உபாயம் சொல்லப்படுகிறது.

(ஐம்புல னகத்தினுட் செறுத்து) சக்ஷுராதி இந்த்ரியங்களை சப்தாதி விஷயங்களிலே போகாமே உள்ளே அடக்கி,

(நான்குடனடக்கி) மநோ புத்தி சித்த அஹங்காரங்களையும் செறுத்து, ஆஹார நித்ரா பய மைதுநங்களையும் தவிர்த்து என்றுமாம்.

(முக்குணத் திரண்டவை அகற்றி) குணத்ரயங்களில் ரஜஸ் தமஸ்ஸுக்களை த்யஜித்து,

(ஒன்றினில் ஒன்றிநின்று) ஸத்வம் ஒன்றிலுமே பொருந்திநின்று,

(ஆங்கு) அந்த யோகத்திலே,

(இருபிறப் பறுப்போர் அறியுந் தன்மையை) புண்ய பாப ரூபங்களான கர்மங்களாலே வரும் ஸம்ஸாரத்தை அறுக்கும் உபாஸகராலே அறியப்படும் ஸ்வபாவத்தை உடையையாய். இப்படியிருந்த யோகத்தாலே அநுபவிக்கையாவது, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய மிடுக்குள்ள தசையோடு ஒக்குமத்தனை. ஆனபின்பு, அவனையே உபாயமாகப் பற்றிப் பிழைக்கவேணும்.

இ. வ்யா. — (ஐம்புலனித்யாதி) இனி ஸம்ஸார பய பீதராய் முமுக்ஷுக்களா யிருப்பார்க்கு ஆஶ்ரயணீயனை யிருக்கும்படி சொல்லுகிறது.

"நித்யாநித்ய வஸ்து விவேகம், சமதமாதி ஸாதநஸம்பத்,
இஹாமுத்ரச பலபோகவிராகம் முமுக்ஷுத்வம்"
—(ஸ்ரீபாஷ்யம்-ஜிஜ்ஞா,)

என்றாற்போலே சொல்லுகிற ஸாதந சதுஷ்டத்தையும் உடையராய், அன்றிக்கே—ஆஹாராதிகளைத் தவிர்த்து, ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களில் வைத்துக்கொண்டு ரஜஸ் தமஸ்ஸுக்களைக் கழித்து நிஷ்க்ருஷ்ட ஸத்வத்தை உடையராய்கொண்டுநின்று, அந்த யோகத்திலே புண்ய பாப ரூப கர்மங்களடியாக ஸம்ஸாரி துঃகத்தை அறுத்துக் கொள்ளவேணு மென்றிருப்பார் அறியும் ஸ்வபாவத்தை உடையனாயிருக்கும்.

ஸாதநாந்தர பரிக்ரஹம் பண்ணினர் உன்னைப் பேணு நிற்க, உன்னையே ஸாதநமாகப் பரிக்ரஹித்த நான் உன்னைப் பெறுதே போவதே!

முக்கண் நால்தோள்
ஐவாயரவோடு * ஆறுபோதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை; *

மு. வ்யா. — (முக்கணித்யாதி.) தந்தாமுடைய கண்களில் மிகுதியாலும் ஜ்ஞாநாதிக்ய மென்கிற இதுவே ஏற்றமாகக் கணிசிப்பார்க்கும் எட்டாத ஸ்வபாவத்தை உடையவன் என்கிறது.

(முக்கண் நால்தோள்) மூன்று கண்களையும் நாலு தோள்களையும் உடையனுகையாலே பஹுபரிகரனுய்,

(ஐவாயரவோடு ஆறுபொதி சடையோன்) ஐந்து வாயையுடைய பாம்பையும் கங்கையையும் ஏகதேசத்திலே அடக்கின ஜடையை உடையனுகையாலே அதிக சக்தனுயிருந்துள்ள ருத்ரனும்,

(அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை) இப்பிடார் கொண்டறிய வொண்ணுத ஸ்வபாவமாகிற பெருமையை உடையையாய் நின்ருய். ஆகையாலே, பெரிய கிழாயான ருத்ராதிகள்நிலை இதுவானல் க்ஷுத்ரரான எங்களுக்குப் பெற விரகுண்டோ! நீயே விஷயீகரிக்கு மித்தனை யென்று கருத்து.

அரு. — (கிழாய்) கிழாயான். மிஶ்ரன் என்னுமாப்போலே ஶ்ரேஷ்டவாசகம்.

இ. வ்யா. — (முக்கணித்யாதி) அபிமாநிகளாயிருப்பார் எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரா யிருந்தார்களேயாகிலும் அவர்களுக்கு அறியவொண்ணுதபடியான உத்கர்ஷம் சொல்லுகிறது.

லலாடநேத்ரனுய், ஸர்வேஶ்வரன் நாலு தோளும் தானுமா யிருந்தானென்று தானும் நாலு தோளையும் உடையனுய், ஐந்து வாயையுடைய அரவை உடையனுய், கங்கையை அடக்கின ஜடையை உடையனுன ருத்ரன்

தன்னுயர்த்தி யெல்லாம் கொண்டு அறியப்பார்த்தாலும் அறியவொண்ணாத ஸ்வபாவமாகிற பெருமையை உடையையாய் நின்றாய்.

கிழாயார் படுகிறது இதுவானால் நான் உன்னை அறிகை யென்று ஒரு பொருளுண்டோ!

ஏழுலகெயிற்றினில் கொண்டனை; *

மு. வ்யா. — ஆபத்து வந்தால் சக்தனோடு அசக்தனோடு வாசியின்றிக்கே ஸர்வ ப்ராணிகளுக்கும் உதவியருளினாய்; மஹாவராஹமாய் ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாற்போல பவார்ணவங்கொண்ட என்னையும் எடுத்தருளவேணு மென்கிறார்.

இ. வ்யா. — ஆபத்து வந்தவன்று அந்த ருத்ராதிகளோ, நீயோ உதவினார்? ப்ரளயங்கொண்டு அண்டபித்தியிலே புக்குச்சேர்ந்த லோகங்களை மஹாவராஹமாய்ப் புக்கு, இடந்தெடுத்து, திருவெயிற்றில் ஏகதேசத்திலே ஒரு நீலமணி அழுத்தினாற்போலே கிடக்கும்படி வைத்தாய். ஸம்ஸார ப்ரளயங்கொண்ட என்னையோ எடுக்கலாகாது?

கூறிய

அறுசுவைப் பயனு மாயினை; *

மு. வ்யா. — மநுஷ்யர்க்கு போக்யமான ஷட்ரஸரூபமான ப்ரயோஜநமானாய். என்னுடைய ப்ரயோஜநத்தையும் எனக்குத் தந்தருளவேணு மென்கிறார்.

இ. வ்யா. — சாஸ்த்ரங்களால் சொல்லப்படுகிற ஷட்ரஸங்களினுடைய ப்ரயோஜந ரூபமாயிருந்து வைத்து என்னுடைய ப்ரயோஜனத்தை எனக்குத் தரவேணும்.

(ஸர்வேஸ்வரன் "ரஸோ வை ஸ:, ஸர்வ ரஸ:"—எனப்படுகையாலே போக்யம் என்கிறார்).

சுடர்விடும்

ஐம்படை யங்கையு ளமர்ந்தனை; * சுந்தர
நால்தோள் முன்னீர்வண்ண! *

மு. வ்யா. — (சுடர்விடுமித்யாதி) தம்முடைய போக்யம் இருக்கும்படியை அருளிச் செய்கிறார்.

மிகவும் விளங்காநின்றுள்ள பஞ்சாயுதங்களையும், வெறும் புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியா யிருந்துள்ள திருக்கைகளினுள்ளே ஆபரணம்போலே அமரும்படி தரித்தாய்.

இ. வ்யா. — (சுடர் இத்யாதி) மிகவும் ப்ரகாசத்தை உடைத்தாயிருக்கிற திவ்யாயுதங்களை வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும் படியான அழகிய திருக்கையில் தரிப்பாயாய்,

சுந்தர நால்தோள் – (1) அழகை (நாலாக) வகுத்தாற் போலே நாலு தோளையும் உடையையாய்,

(2) தனக்குத் தானே அழகை விளைப்பதான நாலு திருத்தோள்களை உடையையாய்.

முன்னீர்வண்ண ! – (1) ஶ்ரமஹரமான வடிவை உடையவனே !

(1) கடல்போலே ஶ்ரமஹரமானவடிவை உடையவனே !

நின்
னீரடி ஒன்றிய மனத்தால் *

மு. வ்யா.— (நின்னீரடி இத்யாதி) தம்முடைய அபேக்ஷிதம் பெறுகைக்குப் புருஷகாரம் உண்டென்கிறார்.

அநந்ய போகரஸத்தால் தேவரீர் திருவடிகளிலே ஒருமைப்பட்ட நெஞ்சை உடையராய்,

இ. வ்யா. — எனக்குப் புருஷகாரம் இல்லாமல் இழக்கிறேனோ !

ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும்

மு. வ்யா. — கல்மஷம் கழற்றின பூர்ண சந்த்ரனைப் போலே தந்தாம் போகத்தைக் கோட்சொல்லாநின்ற முகத்தை உடையராய்.

இ. வ்யா. — சந்த்ரனைப்போலே தர்சநீயமாய் குளிர்ந்த முகத்தை உடையராயிருக்கிற,

164353

மங்கையர் இருவரும்– (1)"துல்யசீலவயோ வ்ருத்தாம்" (ரா. ஸு 16,5) என்றும், "யுவதிஶ்ச குமாரிணீ" (   ) என்றும் தங்கள் பருவத்தாலே பிச்சேற்ற வல்ல பிராட்டிமார் இருவரும்.

(2) பெரியபிராட்டியாரும் ஸ்ரீ பூமிப்பிராட்டியாரும்.

மலரன * அங்கையில்
முப்போழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனே ; *

மலரன அங்கையில்—(1) புஷ்பத்தை த்ருஷ்டாந்திக்க ஒண்ணாத மேன்மையை உடையவான திருக்கைகளாலே.

(2) பூத்தொட்டாற்போலே இருக்கிற ம்ருதுவான திருக்கைகளாலே,

முப்போழுதும் வருட — (1) ஸர்வகாலமும் வருட, (2) திருவடிகளை வருட,

அறிதுயில் — (1) ஆஶ்ரிதஸம்ரக்ஷண ப்ரகாரத்தை அநுஸந்திக்கை.

(2) ஜகத்ரக்ஷணநுரூபமான யோக நித்ரையிலே,

அமர்ந்தனே — (1) வீசி வில்லிட்டு எழுப்பினாலும் எழுப்பப் போகாது. (2) ஒருப்பட்டிருந்தாய்.

நெறிமுறை நால்வகை வருணமு மாயினை ; *

மு. வ்யா. — நெறிமுறை இத்யாதி. முன்பு (ஸ்ருஷ்டி காலத்தில்) அநுஸந்தித்தபடியே ரக்ஷித்த ரக்ஷண ப்ரகாரம் சொல்லுகிறது.

(நெறிமுறை) சாஸ்த்ரமுறை தப்பாதபடி.

(நால்வகை வருணமு மாயினை) சாதுர்வர்ண்யமும் நீ இட்ட வழக்கு.

ஆத்மாக்களுக்கு வர்ணங்களைக் கொடுத்தும் அவர்களுடைய அநுஷ்டாநத்துக்கு ஆராத்யனா யிருப்பானும் அவனே.

" அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் கர்த்தா போக்தா "
(கீ. 9. 64) என்றும்,

"வர்ணாஸ்ரமாசாரவதா புருஷேண பர: புமாந்
விஷ்ணுராராத்யதே நாந்யஸ் தத்தோஷகாரக:"
(வி. பு. 3. 8. 9) என்றும்,
"சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்" (கீ. 4. 13)
என்றும் சொல்லக்கடவதிறே.

அரு. — (வருணமுமாயினை) வ்யங்க்யோக்தி. வர்ணமாதல் வரிக்கப்படுகிறவனாதல். இவற்றை அருளிச்செய்கிறார், ஆத்மாக்களுக்கு இத்யாதி வாக்ய த்ரயத்தாலே. இரண்டுக்கும் ப்ரமாணம் அருளிச் செய்கிறார், "அஹம் ஹி" இத்யாதி.

இ. வ்யா. — (நெறி இத்யாதி) சாஸ்த்ரமர்யாதை தப்பாதபடி முறையிலே நடக்கிற நாலுவகைப்பட்ட வர்ணங்களும் நீ இட்ட வழக்கு.

மேதகு மைம்பெரும் பூதமும் நீயே; *

மு. வ்யா. — ஆத்மாக்களுடைய தேஹாரம்பகங்களான மஹா பூதங்களும் நீயே.

(மேதகு) மேவித்திருக்கும். மேவுகையாவது, தேவோஹம் மநுஷ்யோஹம் என்கிறபடியே பொருந்தி இருக்கை. அதாவது—

—யாதானு மோராக்கையில் புக்கு—(அங்காப் புண்டு
[மாப்ப விழ்ந்தும்
மூதாவில் தடுமாறும் உயிர் முன்னமே
(திருவிரு. 95)

அங்கே தங்கியிருக்கை. அதாவது, கர்மத்துக்கு அநுகூலமாயிருக்கை. இத்தால், ஸத்தாதிகள் நீ இட்ட வழக்கான பின்பு, உன்னையொழிய ரக்ஷகர் உண்டோ என்கை.

இ. வ்யா. — ஜகதாரம்பகமான பூதபஞ்சகங்களும், நீ இட்ட வழக்கு. ஸத்தாதிகளும் உன் அதீநமான பின்பு, உன்னையொழிய ரக்ஷகர் உண்டோ என்கை.

அறுபத முரலும் கூந்தல் காரணம் *
ஏழ்விடை யடங்கச் செற்றனை;

மு. வ்யா. — (அறுபத மித்யாதி) ஸாமாந்ய ரக்ஷணம் சொல்லி விசேஷ ரக்ஷணம் சொல்லுகிறது.

(அறுபத முரலும் கூந்தல் காரணம்) வண்டுகள் தேனைப் பருகி முரலாநின்ற திருக்குழலை யுடையளாகை யாலே போக்யபூதையான நப்பின்னைப் பிராட்டியின் பொருட்டு.

(ஏழ்விடை யடங்கச் செற்றனை) ஏழெருத்தையும் ஊனப்படாதபடி நெரித்தாய். இத்தால், நப்பின்னைப் பிராட்டியுடைய ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதிகளைப் போக்கினாற்போலே என்னுடைய விரோதிகளையும் போக்கித் தந்தருளவேணும் என்று கருத்து.

அரு. — (அடங்க) என்றதுக்கு அர்த்தம் ஊனப்படாதபடி, குறைவுபடாதபடி.

இ. வ்யா. — (அறுபத மித்யாதி) ஆறு காலை உடைத்தாய் மதுபானார்த்தமாகப் படிந்த வண்டுகள் மதுபானமத்தமாய்க் கொண்டு ஆளத்திவையாநின்ற மயிர்முடியை உடைய நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான ருஷபங்களை ஏழையும் ஊட்டியாக நெரித்தாய். (ஆகையால்) என்னுடைய ப்ரதிபந்தகத்தையும் நீயே போக்கவேணும்.

அறுவகைச் சமயமும் அறிவரு நிலையினை ; *

(1) அநாஶ்ரிதரான பாஹ்யருடைய நினைவுக்கு கோசரமில்லை.

(2) ஆறுவகைப்பட்ட பாஹ்யஸமயங்களால் அறியவொண்ணாத ஸ்வபாவத்தை உடையையாய் இருந்தாய்.

ஐம்பா

லோதியை ஆகத் திருத்தினை ; *

மு. வ்யா. — ஐந்து லக்ஷணமுடைய திருக்குழல் கற்றையை யுடைய பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே வைத்தாய். (இத்தால்) மேல் சொல்லப்படுகிற ஐஶ்வர்ய ஸௌந்தர்யங்களுக்கு அடியான ஶ்ரிய:பதித்வம் சொல்லப் படுகிறது.

அரு. — ஐந்து லக்ஷணம் — மென்மை, குளிர்த்தி, நாற்றம், நெடுமை, கருப்பு ஆக ஐந்துவகைப்பட்ட மயிர்முடி.

இ. வ்யா. — (ஐம்பாலித்யாதி) ஐந்து லக்ஷணத்தை உடைத்தான மயிர் முடியை உடையளாய்.

“ ந கஶ்சிந் நாபராத்யதி ” (ரா. யு. 116. 44) என்னும் பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே வைத்தருளினாய்.

(இத்தால்) மேல் சொல்லப்படுகிற ஐஶ்வர்ய ஸௌலப்யங்களுக்கு நிபந்தநமாக ஶ்ரிய:பதித்வம் சொல்லிற்று.

அறமுதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய் *
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை ; *

1–(அறமுதல்) தர்மாதி ஸகல புருஷார்த்தப்ரதனுமாய்,

(மூர்த்தி மூன்றாய்) ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகனாய்,

(இருவகைப் பயனாய்) ஸுகது:கங்களுக்கு நிர்வாஹகனாய்,

(ஒன்றாய் விரிந்து நின்றனை) ஸர்வமும் ஸர்வப்ரகாரமாயும் இருக்கச்செய்தே அவற்றோடு ஒட்டற்று நின்றாய். இத்தால் ஐஶ்வர்யம் சொல்லிற்று.

இ. வ்யா.—அறமுதலித்யாதி. தர்மார்த்த காம மோக்ஷங்களாகிற புருஷார்த்த சதுஷ்டயங்களுமாய்.

(மூர்த்தி மூன்றாய்) ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நடுவே ஸ்வரூபேண நின்று, அவர்களை சரீரமாகக் கொண்டு நின்று.

“ ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்
ப்ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மிகாம்
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்த்தந:
(வி. பு. 1. 2. 66) என்னலாம்படி நிற்பானாய்,

(இருவகைப் பயனாய்) ஸுக து:கங்களுக்கு நியாமகனாய்,

(ஒன்றாய் விரிந்து நின்றனை) காரணாவஸ்தையில் ஸச்சப்தவாச்யனாய், ஸ்ருஷ்டிகாலத்திலே (கார்யாவஸ்தையிலே) வந்தவாறே "பஹு ஸ்யாம்" (சாந்தோ. 6. 2) என்கிறபடியாய் விஸ்த்ருதனாய் நிற்கிறாயும் நீ.

குன்றாமது மலர்ச்சோலை
வண்கொடிப் படப்பை * வருபுனல் பொன்னி
மாமணி அலைக்கும் * செந்நெலொண் கழனித்
திகழ்வன முடுத்த * கற்போர் புரிசை
கனகமாளிகை * நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் * செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை *

1—(குன்றாமது மலர்) என்று மேலுக்கு. நீர்மைக்கு எல்லையான இடத்திலே சரணம் புகுகிறார்.

(குன்றாமது மலர்ச்சோலை) குன்றாத மது வெள்ளத்தை உடைத்தான பூஞ்சோலை. ஆராவமுதாழ்வாருடைய கடாக்ஷமாகிற அமுதவெள்ளத்தாலே வளருகிற சோலையாகையாலே நித்யவஸந்தமாய்ச் செல்லுகிறது.

இ. வ்யா. — (குன்றா இத்யாதி) குன்றாத மதுவையும் மலரையும் உடைத்தான சோலையை யுடைத்தாய்,

1—(வண்கொடிப் படப்பை) அழகிய கொடிக்கால்களையும் நீர் நிலங்களையு முடைய.

அரு. — (வண்கொடி) வெற்றிலைக்கொடி. (படப்பை) வெற்றிலைத் தோட்டம்.

2—(வண்கொடி இத்யாதி) அழகிய கொடிகளை உடைத்தான தோட்டங்களையு முடைத்தாய்,

மு. வ்யா .— (வருபுனல்பொன்னி) திகழ்வனமுடுத்த, பெருகிவாராநின்ற திருப்பொன்னி மஹார்க்கமான ரத்நங்களைக் கொழித்து ஏறவருகிற, இத்தால் விளைகிற செந்நெல்லையும் உடைத்தாகையாலே அழகிய கழனியையும் உடைத்தாய், விளங்காநின்ற அழகிய வநங்களாலும் சூழப்பட்ட,

2—மாறாத ஜலஸம்ருத்தியை உடைத்தான பொன்னி பாய்ந்து ரத்நங்களைக் கொழித்து ஏறிடாநிற்பதாய்,

அழகிய செந்நெல்லை யுடைத்தான கழனிகளை யுடைத்தாய், திகழா நின்ற வநத்தைச் சுற்றிலே உடைத்தாய்,

மு.வ்யா.—(கற்போர் புரிசை) வித்வான்கள் படுகாடு கிடக்கும் நகரி. (புரிசை–நகரி)

இ. வ்யா. — தொழில் ஓரப்படா நின்றுள்ள மதிளை யும் உடைத்தாய், (புரிசை–மதிள்).

மு. வ்யா.— (கனகமாளிகை) பொன்னாலே செய்யப் பட்ட மாளிகை. (நிமிர்கொடி விசும்பி விளம்பிறை துவக்கும்) அதில் நிமிராநின்றுள்ள கொடிகள் சந்த்ரனைச் சென்று துவக்கும்–தடை பண்ணும்).

அரு. — (நிமிர்கொடி) கொடிகள், த்வஜங்கள்.

இ. வ்யா. — பொன்னாலே செய்யப்பட்ட மாளிகை யில் நட்ட கொடிகளானவை ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனைத் துவக்கினாலும் (அது) சுற்றிடாநிற்பதாய்,

மு. வ்யா. — (செல்வம் மல்கு தென் திருக்குடந்தை) நிரதிசயமான ஸம்பத்தையும் போக்யதையையும் உடைய திருக்குடந்தையிலே,

இ. வ்யா. — நிரவதிகஸம்பத்தையும் போக்யதையை யும் உடைத்தான திருக்குடந்தையிலே,

அந்தணர் மந்திரமொழியுடன் வணங்க *

மு. வ்யா. — (அந்தணர் மந்திரமொழியுடன் வணங்க) அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர் ரஹஸ்யமான ஸூக்தங்களைக்கொண்டு ஆஸ்ரயிக்க,

இ. வ்யா.—ப்ராஹ்மணர் வேதாந்த ஸூத்ரங்களைக் கொண்டு ஆஸ்ரயிக்க,

ஆடரவமளியில் அறிதுயி லமர்ந்த பரம!

—(ஆடரவமளியில் அறிதுயி லமர்ந்த பரம!) தன்னுடைய ஸ்பர்சத்தாலே விரிக்கப்பட்ட பணங்களையுடைய திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே ஜகத்ரக்ஷணத்துக்காக உணர்ந்துகொண்டு கண்வளர்ந்தருளுகையாலே ஸர்வேஸ்வரனானவனே!

(ஆடரவு) திருவநந்தாழ்வானுடைய உச்ச்வாஸநிச்வாஸங்களாலே தூங்கு தொட்டிலைப்போலே என்னவுமாம்.

இ. வ்யா. — உன்னோட்டை ஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடைய திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே ஜகத்ரக்ஷணத்திலே அவஹிதனாய்க் கொண்டு கண்வளர்ந்தருளுகிற ஸர்வாதிகனே!

நின்னடியிணை பணிவன்;
வருமிட ரகல மாற்றோ வினையே.

மு. வ்யா. — உன்னுடைய திருவடிகளில் சரணம் புகுந்தேன். இத்தை அநுபவிக்கைக்கு விரோதியைப் போக்கியருள வேணும்.

இத்தால் இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவாரணத்துக்கும் ஸித்தமான உபாயத்தைப் பற்றிவிடுகிறார். (விடு?)

அரு. — (மாற்றோ வினையே) என்னைவிட்டகலும்படி மாற்று. ஓர் இடர் அகல அடியிணை பணிவன். என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் மாற்று என்னவுமாம்.

இ. வ்யா. — நின்னடியிணை இத்யாதி. என்னுடைய ஸ்வரூபாநுரூபமாக தேவரீர் திருவடிகளிலே சரணம் புகுந்தேன். நீயும் உன்னுடைய ஸ்வரூபாநுரூபமாக என்னுடைய ஸாம்ஸாரிக வ்ருத்தத்தைக் கழித்துத் தரவேணும் என்கிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருவெழுகூற்றிருக்கை சுருக்கம்

1. அயனை ஈன்ற(னை)வன் ;
2. இலங்கை யட்ட(னை)வன் ;
3. மூவுல களந்த(னை)வன் ;
4. வேழத் தரங்கையைத் தீர்த்த(னை)வன் ;
5. அந்தணர் வணங்கும் தன்மை(யை)யன் ;
6. இருபிறப் பறுப்போர் அறியுந்தன்மை(யை)யன் ;
7. ஆறுபொதி சடையோன் அறிவருந்தன்மைப் பெருமையுள் நின்ற(னை)வன் ;
8. ஏழுல கெயிற்றினில் கொண்ட(னை)வன் ;
9. அறுசுவைப் பயனுமா(யினை)யவன் ;
10. ஐம்படை யங்கையுள் அமர்ந்த(னை)வன் ;
11. சுந்தர நாற்றோள் முன்னீர் வண்ண ! (ன்);
12. மங்கையர் இருவரும் வருட அறிதுயி லமர்ந்த(னை)வன் ;
13. நால்வகை வருணமுமா(யினை)யவன் ;
14. ஐம்பெரும் பூதமு (நீயே) மாயவன் ;
15. அறுபத முரலும் கூந்தல் காரணம் ஏழ்விடை யடங்கச் செற்ற(னை)வன் ;
16. அறுவகைச் சமயமும் அறிவருநிலையி(னை)னன் ;
17. ஐம்பா லோதியை ஆகத்திருத்(தினை)தவன் ;
18. அறமுதல் நான்கவவகையாய்
மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய்
ஒன்றாய் விரிந்து நின்ற(னை)வன் ;
19. தென்திருக் குடந்தை அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க * ஆடரவமளியி லறிதுயில்
அமர்ந்த பரம ! நின்னடியிணை பணிவன் ;
வருமிட ரகல மாற்றோ வினையே.

1. அயனை ஈன்றவன்—

ஸ்ருஷ்டிக்கு அதிகாரியாக ப்ரஹ்மாவை உண்டாக்கி அவன்மூலமாக லோகங்களை ஸ்ருஷ்டிக்கிறவன்.

2. இலங்கை அட்டவன்—

துஷ்டர்கள் நிறைந்த தேசத்தை த்வம்ஸம் பண்ணுகிறவன்.

3. மூவுல களந்தவன்—

மூன்று லோகங்களையும் தன் காலடிக்குள்ளாக்கினவன்.

4. வேழத் தரந்தையைத் தீர்த்தவன்—

தன்னையே நினைந்துருகும் ஒரு மிருகத்தினுடைய ஆபத்தைப் போக்கினவன்.

5. அந்தணர் வணங்கும் தன்மையன்—

அக்நிஹோத்ரம், வேதாத்யயநம், பஞ்சமஹாயஜ்ஞம், படிக்கை, படிப்பிக்கை, யாகம் பண்ணுகை, பண்ணுவிக்கை, தாநம் கொடுக்கை, கொள்ளுகை — ஆக எல்லாவற்றுக்கும் அதிகாரிகளான ப்ராஹ்மணராலே ஆராதிக்கத் தக்கவன்.

6. இருபிறப் பறுப்போர் அறியும் தன்மையன்—

த்யாநயோகத்திலுள்ள உபாஸகராலே அறியத் தக்கவன்.

7. ஆறுபொதி சடையோன் அறிவருந்தன்மைப் பெருமையுள் நின்றவன்—

கங்கையைத் தன்னுடைய ஜடையிலே தாங்கி பூமியை ரக்ஷித்த மஹாசக்தனான சிவனாலும் அறிய முடியாதவன்.

8. ஏழுல கெயிற்றினில் கொண்டவன்—

ப்ரளயத்தில் மூழ்கிப்போன தன்னுடைய பூமியை வராஹரூபியாய் வந்து தன் பல்லாலே பெயர்த்தெடுத்துக் காத்தவன்.

9. அறுசுவைப் பயனு மாயவன்—

"ரஸோ வை ஸ:, ஸர்வரஸ:"—என்று சொல்லுகிறபடி ஸர்வவித போக்யனாயிருக்கிறவன்.

10. ஐம்படை அங்கையு ளமர்ந்தவன்—

அடியார்களைக் காப்பதற்கென்றே பஞ்சாயுதங்களை எந்நேரத்திலும் கைகளில் தரித்துக்கொண்டேயிருப்பவன்.

11. சுந்தர நால்தோள் முன்னீர் வண்ணன்—

அழகான நாலு திருக்கைகளும் கடல்போல் கருத்த நிறமும் உடையவன்.

12. மங்கையர் இருவரும் வருட அறிதுயி லமர்ந்தவன்—

ஆஸ்ரிதனுக்குப் புருஷகாரம் பண்ணவல்ல பெரிய பிராட்டியும் பூமிப்பிராட்டியும் திருவடிகளை வருடாநிற்க, ஜகத்ரக்ஷண சிந்தையாகிற யோகநித்ரையிலே இருப்பவன்.

13. நால்வகை வருணமு மாயவன்—

வர்ணாஸ்ரம வ்யவஸ்தையை உண்டாக்கினவன்.

14. ஐம்பெரும் பூதமு மாயவன்—

பஞ்சபூதங்களையும் நியமிப்பவன்.

15. அறுபதமுரலும் கூந்தல் காரணம் ஏழ்விடை யடங்கச் செற்றவன்—

ஏழு எருதுகளைக் கொன்று நப்பின்னைப் பிராட்டியோடு கூடின மஹாவீரனும் பரமரஸிகனுமாயிருப்பவன்.

16. அறுவகைச் சமயமும் அறிவரு நிலையினன்—

வேதவிருத்தமாயுள்ள பௌத்தம் முதலான ஆறு-வித புறச்சமயங்களாலும் அறிய முடியாதவன்.

17. ஐம்பாலோதியை ஆகத்திருத்தவன்—

ஸ்ரிய:பதியாயிருக்கும் பெருமையை உடையவன்.

18. அறமுதல் நான்கவகையாய்—
மூர்த்தி மூன்றாய்—
இருவகைப் பயனாய்—
ஒன்றாய் விரிந்து நின்றவன்—

தர்மம் முதலான நாலு புருஷார்த்தங்களையும் கொடுக்க வல்லனாய்,

ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன்—என்ற மூன்று ரூபங்களை உடையனாய்,

ஸுகதுஃகங்களாகிற இரண்டு விதமான பலன்களைக் கொடுக்கிறவனாய்,

தான் ஒருவனாயே இருந்து இப்படியெல்லாம் விரிந்திருக்கவும் வல்லனாயிருப்பவன்.

19. தென் திருக்குடந்தை அந்தணர் மந்த்ர மொழியுடன் வணங்க * ஆடரமளியில் அறிதுயி லமர்ந்த பரமன்—

இத்தனை சக்தியும் கருணையுமுள்ளவன் மநுஷ்யர்க்குப் போகவொண்ணாத லோகத்திலே இருப்பானாய், ராம க்ருஷ்ணாதிரூபமாக பூலோகத்துக்கு வந்ததுவும் காலாந்தரத்திலேயாயிருக்கச் செய்தே, நாமும் பின்னுள்ளாரும் அவனைக் காண்பதெப்படி யென்று கலங்கவேண்டாதே, எல்லாரும் எக்காலத்திலும் கண்டு களித்து ஆஸ்ரயிக்கும்படி ஸர்வ ஸுலபனாய் திருக்குடந்தையிலே வந்து கிடக்கிறான்.

குன்றுமது மலர்ச்சோலை...

பூஞ்சோலைகளும், கொடிக்கால்களும் காவிரிபாயும் நெல்வயல்களும், தோட்டங்களும், வித்வாங்களும், மதிள்களும், மாளிகைகளும் மிக்க செல்வமுமாயிருக்கிற ஊரே வாஸயோக்யமாயிற்று.

அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க—

அங்குத்தை ப்ராஹ்மணர்களும் அவனுக்குக் காலம் தவறாவல் மந்திரங்களைச் சொல்லி திருவாராதநம் பண்ணி அவனைச் சிறப்பிக்கிறார்கள். (திருவாராதநமில்லாத மூர்த்தியும், மந்திரமில்லாத பூசையும் பயன்படா.)

நின்னடி பணிவன்—

ஆகையால், அவன் இருக்கிற லோகாந்தரத்துக்கும் போகமாட்டாமல் அவன் அவதரித்த காலங்களிலும் ஸேவித்தறியாமல், த்யாநயோகத்துக்கும் அசக்தராயிருப்பார்க்கு ஸர்வ ஸுலபனாயிருக்கிற குடந்தைப்பிரானை ஆஸ்ரயிக்கையன்றி வேறு விரகில்லை.

வருமிடரகல மாற்றோ வினையே.—

மறுபிறவிக்குக் காரணமான கர்மங்களை மாற்றி இந்த ஸம்ஸாரத்தில் நின்றும் ரக்ஷிக்க அவனே சக்தனாகிறான்.

# திருமங்கையாழ்வார் சரித்திரம்

சோழ மண்டலத்தில் திருமங்கை நாட்டில் திருவாலி திருநாட்டுக்கு அடுத்த திருக்குறையலூரில் கள்ளக்குடியில் நள வருஷம், கார்த்திகை மாஸம், கார்த்திகை நக்ஷத்திரத்தில் அவ்வூர் சேனைத்தலைவனுக்கு ஒரு மகன் பிறந்தான். பிறந்த குழந்தை மிகவும் கருப்பாயிருந்ததால் அதற்கு நீலனென்று பெயராயிற்று. அவன் சிறு பிராயத்திலேயே வீரனாகிப் போர் செய்து திருமங்கை நாட்டுக்கு சிற்றரசனானான்.

அப்போது திருவெள்ளக்குளம் என்ற ஊரில் குமுதவல்லி யென்ற பெண் ஒரு மருத்துவனுக்கு வளர்ப்பு மகளாக வளர்ந்து வந்தாள். அவளை மணக்க விரும்பினான் நீலன். சங்கச் சக்ரங்களைத்தோள்களில் பொறித்துக் கொண்டு திருமண்காப்பு தரிக்கும் வைஷ்ணவனே வேண்டுமென்றாள் அவள். உடனே நீலன் திருக்குறையலூர்ப் பெருமானிடம் பிரார்த்தித்து, பஞ்சஸம்ஸ்காரம் பெற்று வைஷ்ணவனாகி அவளை மணந்தான். ஒரு வருஷமாவது நித்யமாக ஆயிரத்தெட்டு வைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநம் பண்ணிவைக்க விரும்பினாள் குமுதவல்லி. நீலன் பகுதிப்பணம் முழுதையும் அவ் விஷயத்தில் செலவு செய்தான். இதனால் சோழ மன்னவன் நீலனைச் சிறையிலிட, காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள் நீலனுடைய கனவில் வந்து வேகவதிக் கரையில் புதையல் இருப்பதை அறிவித்தார்.

மங்கை மன்னவன் காவலாளர்க்குக் கனவைச் சொல்லி, காஞ்சிபோய்ப் புதையலை எடுத்து கடனைத் தீர்த்தான். சோழ மன்னன் நீலனுக்கு பயந்து பணத்தையெல்லாம் திருப்பியனுப்பினான். அவ்வளவும் கைங்கர்யத்திலேயே செலவாயிற்று. நீலன் வழிபறித்துக் கைங்கர்யம் நடத்தலானான். பாபிகளின் பணத்தைப் பறித்து பாகவத பூஜை பண்ணுவதால் நீலனை அநுக்ரஹிக்க விரும்பி, ரங்கநாதன் நாச்சியாருடன் மணவாளப் பிள்ளையாக வந்து கொள்ளை நடக்கும் திருமணங்கொல்லை வழியாக நடந்தார். நீலன் அவர்களுடைய ஆபரணங்களையும் கொள்ளைசெய்து மணவாளப்பிள்ளையின் கால் மோதிரத்தையும் கழற்ற

லானன். பல்லால் கடித்தும் அது கழலவில்லை. பிராம் மணன் ஏதோ மந்திரம் செய்தானென்று நினைத்து, அந்த மந்திரத்தை தனக்குச் சொல்லென்று கத்தியைக் காட்டி பயமுறுத்த, பிராம்மணனும் அருகிலழைத்து அஷ்டா க்ஷரத்தை உபதேசித்து, தன்னை அரங்கத்துறையும் அழகிய மணவாளனென்றும் காட்டித்தந்தான். இத்தால் "வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்"—என்று நீலனுக்கு ஏற்றமுண்டாயிற்று. இந்த வழிப்பறி ஸ்ரீரங்கத் தில் மார்கழி இராப்பத்து எட்டாம் திருநாளில் நடக்கிறது.

அஷ்டாக்ஷரம் உபதேசிக்கப்பெற்ற திருமங்கை யாழ்வார் அப்போதே ஞானம் பிறந்து "வாடினேன் வாடி" தொடங்கி "நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்"—என்று பாடினார். உடனே திரு வரங்கம் தொடக்கமான எல்லா கோயில்களையும் ஸேவித்து நாலு விதமான கவியும் பாட வல்லராகி, ஒவ்வொரு திவ்ய தேசத்தையும் பாடி சீர்காழியில் திருஞானசம்பந்தரையும் பாட்டினால் வென்றார்; ஸ்ரீரங்கத்தில் கோபுரம், மண்ட பம், பிராகாரம் முதலிய கைங்கர்யங்கள் செய்வதற்காக நாகபட்டணத்தில் பொன்னாலிருந்த புத்த விக்ரஹத்தைக் களவாடிவந்து, உருக்கி விற்றுப் பணமாக்கினார்; ஸ்ரீரங் கத்திலேயே நெடுநாள் இருந்து கைங்கர்யங்களைப் பூர்த்தி செய்து, திருக்குறுங்குடி போய் சரீரத்தை விட்டார்.

இவர் வாளும் வேலும் தரித்து போர் வென்றதால், வாட்கலியன், வேல் வலவனென்று தம்மைத் தாமே சொல்லுகிறார்; நாலு கவியிலும் வல்லராகையாலே நாலுகவிப் பெருமாளென்றும் சிறப்புற்றார்.

இவர் அருளின நூல்கள் ஆறு:—

1. பெரிய திருமொழி 1084 பாட்டு
2. திருக்குறுந்தாண்டகம் 20 ,,
3. திருவெழுகூற்றிருக்கை 1 ,, (46 வரி)
4. சிறிய திருமடல் $77\frac{1}{2}$ கண்ணி
5. பெரிய திருமடல் $148\frac{1}{2}$ ,,
6. திருநெடுந்தாண்டகம் 30 பாட்டு

இந்த அடைவிலேயே பிரபந்தங்கள் உண்டாயின.

## பெரியவாச்சான் பிள்ளை

இவர் திருவடமருதூருக்கு அடுத்த ஆடுதுறைக்கு வடக்கிலுள்ள சேங்கனூர்க் காரர். இவருடைய தகப்பனர் யாமுநாசார்யர்; குமாரர் நாயனாராச்சான்பிள்ளை. இவருக்கு இயற்கைப் பெயர் கிருஷ்ணன்; பெரியவாச்சான் பிள்ளை என்பது சிறப்பு. அபயப்ரதராஜரென்றும் இவருக்குத் திருநாமம் உண்டு. இவர் சோழிய குலத்தில் பிறந்த பிராம்மணர்.

இவர் ஸ்ரீரங்கத்திலேயே இருந்துகொண்டு நம்பிள்ளை யினிடம் எல்லா சாஸ்த்ரங்களும் கற்றார்; நாலாயிரம் பாட்டாயுள்ள இருபத்திநாலு ப்ரபந்தங்களுக்கும் வியாக்கி யான மிட்டருளினார். இவருடைய கிரந்தங்களெல்லாம் வியாக்கியானங்களே; பரந்தரஹஸ்யம் மட்டும் தனி நூல். இவர் ஸம்ஸ்கிருதம் தமிழ் இரண்டிலும் பெரிய பண்டிதரா யிருந்தும் எல்லாவற்றையும் தமிழிலேயே எழுதினார்.

இவர் ராமாயணத்தில் சுமார் 200 சுலோகங்களைப் பொறுக்கியெடுத்து வியாக்கியானம் எழுதினார். அதற்கு தனிஸ்லோக மென்று பெயர். இவர் வேதாந்ததேசிக ருக்கு ஸமகாலத்தவராயிருந்தாலும் அவரைவிடப் பெரிதும் முதியவர். தேசிகர் ராமாயணத்தில் சில சுலோகங்களுக்கு அபயப்ரதாநஸார மென்று தமிழில் வியாக்கியானம இட்டருளினவர், மற்றை சுலோகங்களுக்கும் வியாக்கி யானம் எழுதப்பார்த்து, முன்பே பெரியவாச்சான் பிள்ளை எழுதினதுக்குமேல் அதிகமாக ஒன்றும் எழுதத் தேவை யில்லாமல்—“இனி எல்லாம் சோழியன் உமிழ்ந்த சக்கை”—என்றாராம்.

# திருவெழுகூற்றிருக்கை

## பாட்டு வியாக்கியானங்களுக்கு அகராதி

### அ

அகத்தினுள் செறுத்து, அகம்
அகல "அகல மாற்று"
அகற்றி
அங்கை
அஞ்சிறை, அஞ்சிறைப்பறவை
அடக்கி
அடங்க, அடங்கலும்-எல்லாம்
அடி-பாதம், காரணம்
அடியிணை
அடுக்கும்-தகும்
அடைய
அட்(டனை)டான்
அதுக்கு
அத்தோடு
அந்தணர், அந்தணர் மந்திரம்
அந்தணர் வணங்கும் தன்மை
அமர்ந்(தனை)தான்
அமளி, ஆடரவமளி
அமையும்-போதும்
அம் 'அஞ்சிறை'
அம்மணக் கூத்தடிக்கும் தேசம் - ஶ்ரமணர், அமணர் அம்மணம்-என்று வரிசையாகத் திரிந்தது. நிர்வாணமாயிருக்கையே அவர்களுக்குச் சிறப்பாகையால், அவர்களுக்குப் பேரான அமணரென்ற சொல்லே அம்மணமென்றாகி நிர்வாணத்தைக் குறிக்கிறது. நிர்வாணமாகத் திரிந்து களிக்கும் நாடு.
அம்மணக்கூத்து, அம்மணம்
அயன்-பிரம்மா
அரவமளி-(அரவத்தமளி)
அரவு
அருநிலை-'அறிவருநிலை'
அருந்தன்மை-'அறிவருந்தன்மை'
அரு(மை)
அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்து - அரைக்கட்டும் தலைக் கட்டும் கலையும்படி வேகமாக வந்து.
அலைக்கும்-கொழிக்கும், அலசும்
அல்லது-தவிர, அல்லாமல்
அல்லி-இதழ்
அவ்வருசாயிருந்ததே - எட்டாத-தாய் கிட்டாததாய் இருந்ததே.
அவ்வருகு-அப்பால்
அழல், அழல்வாய்-அழல்போன்ற வாய்
அழல்வாய்வாளி-அழல்போன்ற வாயையுடைய அம்பு.
அழியச்செய்தான்-அழித்தான்
அழியமாறி-அழித்துமாறி
அளந்(தனை)தான்
அளவு-மட்டும், மாத்திரம்
அறமுதல் நான்கு - அறம் பொருளின்பம் வீடு என்ற நாலு
அறம்
அறி-அறிவு
அறிதுயில் - யோகநித்ரை, அறிவோடுள்ள துயில்
அறிதுயிலமர்ந்த பரமன்

அறிதுயிலமர்ந்(தனை)தான்
அறியுந்தன்மை
அறியும்
அறிவருநிலையி(னை)னன்-அறிய முடியாதநிலை...
அறிவருந்தன்மைப் பெருமை-அறியவொண்ணாப்பெருமை
அறிவருமை
அறிவிக்கிறாராயிருக்கிறது
அறிவு
அறு-ஆறு
அறுசுவைப் பயன்
அறுதியிட்டிருக்கையாயிற்று
அறுதொழில், அறுதொழிலந்தணர்
அறுபதமுரலுங்கூந்தல்
அறுபதம்-வண்டு "அறுகால சிறு வண்டு"
அறுப்போர்
அறுவகை, அறுவகைச் சமயம்
அற்று - 'ஒட்டற்று'
அன-போல. "மலரன அங்கை"
அன்றிக்கே - அல்லது. அன்று - போது 'அவை இல்லாதவன்று' 'ஆபத்து வந்தவன்று'
அன்றே-அல்லவே. "செய்யலாவதன்றே"
அன்னலும் துன்னலுமான பூமி- "அஸாரமான பூமி. அன்னல்-புகை, துன்னல்-சிறு திவலை. வெய்யிலும் மழையுமாயுள்ள பூமி. கண்டதும் கடியதும்" என்று அரும்பதங்கள்.

## ஆ

ஆகம்-உடல்
ஆகா(ய்)ன்
ஆடரவமளியில் அறிதுயிலமர்ந்த பரமன்
ஆடரவு-ஆடு பாம்பு, ஆடு
ஆதல்-ஆவது
ஆந்தராளிகர் குடி - முமுக்ஷுக்களின் குலம். முமுக்ஷுக்கள் ஸம்ஸாரிகள் போலே அஜ்ஞானத்தாலே ஸந்தோஷிக்கையும், நித்யஸூரிகள்போலே ஜ்ஞானத்தாலே ஸந்தோஷிக்கையுமின்றிக்கே, ஸம்ஸாரிகளுக்கும் நித்யஸூரிகளுக்கும் நடுவான அந்தராளத்திலிருந்து ஸங்கடப்படுமவர்களா யிருக்கையாலே ஆந்தராளிகரானார்கள்.
ஆமம்-அஜீர்ணம்
ஆயிற்றது-ஆயிற்று
ஆயி(னை)னான்
ஆராவமுதாழ்வார் - திருக்குடந்தையெம்பெருமானுக்குத் திருநாமம். பிரானென்று ஸர்வேசுவரனையும் ஆழ்வாரென்று பக்தர்களையும் சொல்லாநிற்க, இங்கே பிரான் ஆழ்வாராகி, திருமழிசையாரான ஆழ்வார் திருமழிசைப் பிரானானார். திருமழிசையாழ்வார் திருமழிசைப் பிரானாகத் திகழ்ந்ததால் அவரிடத்தில் வ்யாமோஹங் கொண்ட ஆராவமுதன் ஆராவமுதாழ்வாரானார்.
ஆலத்திவழிக்கை - ஆலத்தியாலே வழிக்கை, த்ருஷ்டிதோஷத்தைப் போக்குகை
ஆழ்வார்-பக்தியில் ஆழ்ந்தவர்
ஆளத்தி- 'ஆளத்திவையாநிற்கும்' 'ஆளத்தியாவது காநத்துக்குப் பூர்வாங்கமான ஆலாபம்'

ஆறு-நதி
ஆறு பொதி-ஆறு மூட்டை
ஆறுபொதி சடை - ஆறு சடை மூட்டை
ஆறுபொதி சடையோன் - கங்கா தரனான சிவன் - கங்கையாறு பொதிந்த சடையை உடைய வன்
ஆற்றப்பார்த்தார்-ஆற்றிக்கொள்ள விரும்பினார், யத்தனித்தார்.
ஆற்றாமை-தாங்கமாட்டாமை
ஆனபின்பு-ஆகையால்

## இ

இங்ஙனே
இடங்கொண்டநெஞ்சம்-இட முடைத்தான விசாலமான நெஞ்சம்
இடந்தெடுத்து-பெயர்த்தெடுத்து "மஹாவராஹமாய்ப்புக்கு இடந்தெடுத்து"
இடம், இடர், 'இடரகலமாற்று'
இட்டபோதோடு இடாதபோ தோடு வாசியற
இட்டவழக்கு-வைத்தநிலை, இட்ட கட்டளை
இணங்கி 'இணங்கிக் கிடப்பன'
இணை - 'அடியிணை'
இதொருசீற்றம் இருந்தபடியென்!
இத்தால்
இயங்கா-ஸஞ்சரிக்காத
இரட்டி-இரண்டுமடங்கு. "பண் டையிலும் இரட்டியாய்"
இரண்டவை-இரண்டு. "முக் குணத் திரண்டவை யகற்றி"
இரண்டு
இரந்தாரிரப்பு-இரப்பாளரின் இரப்பு
இரப்பாளர்-யாசிப்பவர்
இரப்பிலே தகணேறின-யாசிக்கும் தன்மை தழும்பேறின
இரப்பு-யாசனை
இரு-இரண்டு, பெரிய
இருகால்-இரண்டு நுனி
இருக்கும் 'அறியும் ஸ்வபாவத்தை உடையனாயிருக்கும்'
இருசுடர்-சந்த்ர ஸூர்யர்கள்
இருசெவி
இருத்தி(னை)னன்
இருநீர், இருநீர் மடு
இருந்ததீ-இருந்ததே!
இருந்துள்ள-இருக்கிற 'சக்தனாயிருந்துள்ள ருத்ரன்'
இருந்ததே குடியாக எல்லாரும்- குடியாக இருந்தவர்கள் எல் லாரும். எல்லாரு மென்பது இல்லாமல், இருந்ததே குடி யாக என்றிருந்தாலும் எல்லாரு மென்றே பொருள்.
இருந்தார்களேயாகிலும் - இருந் தாலும்.
இருந்துவைத்து-இருந்து
இருபிறப்பறுப்போர்-முமுக்ஷுக் கள், ப்ரஹ்மத்வேஷிகள்
இருபிறப்பு-ப்ராஹ்மண்யம்
இருப்பாயுமாய்-இருப்பனான நீ
இருப்பாயும் நீயே
இருமலர்-பெருமலர்
இருவகை, இருவகைப் பயன்
இருவர்
இலங்கு - விளங்கு. "மானுரி யிலங்கு மார்வு"

இருசுடர் மீதினிலியங்கா மும் மதிளிலங்கை
இல்லாதத்தை-இல்லாததை
இல்லாதவன்று-இல்லாதபோது
இல்லாமலே
இழவு-துக்கம்
இளம்பிறை, இள(மை)
இறே - ஈற்றசை, வாக்கியத்தின் இறுதியில் வரும் அழுத்தச் சொல்.

ஈ

ஈரடி
ஈரெயிறு-இரண்டு பல்
ஈரெயிற் றழல்வாய் வாளி - அம்பு அடிப்புறத்தில் பிறைபோல இரண்டு பற்களும், நுனிப்புறத்தில் அழல்வாயுமா யிருக்கை.
ஈர்-இரண்டு
ஈன்ற(னெ)னன்

உ

உகந்தருளின நிலங்கள்-எம்பெருமான் திருக்கோயில்கொண்ட ஸ்தலங்கள்.
உடுத்த - சூழ்ந்த "திகழ்வன முடுத்த"
உடையன்-உடையவன்
உந்தி
உமிழ்வாய்-உமிழ்கிற, துப்புகிற-வாய் 'செங்கண்தழலுமிழ்வாய்'
உயர்த்தி-பெருமை. 'ருத்ரன் தன்னுயர்த்தி யெல்லாம் கொண்டு அறியப்பார்த்தாலும்'
உரி-தோல்
உரியிலங்கு மார்வு- "மானுரி..."
உலகு

ஊ

ஊட்டியாக நெரித்தா(ய்)ன்-ஊட்டி-கழுத்து என்று அரும் பதங்கள். "ஊட்டியைத் திருப்பு" என்றும் சொல்லுவதுண்டு. ஊட்டி-ஊண், ஊணாக நெரித்தான், ஊணுக்கேற்றபடி பிண்டமாகப்பிடித்தான் என்று சொல்லலாம்.

எ

எத்தனையேனும்-எவ்வளவேனும் 'எத்தனையேனும் அதிசயிதஜ் ஞானராயிருந்தார்களேயாகிலும்'
எம்பெருமான்-எங்கள் பெருமான்
எயிறு-பல் "ஈரெயிறு"
எல்லைநிலம்
எளியர்
எளியராயிருப்பார்-அசக்தர்கள்
என்றாற்போலே சொல்லுகிற
என்றுமாம்-என்றும் சொல்லலாம்
என்ன - "ஸகல பதார்த்தங்களுடைய உத்பத்தி என்ன ரக்ஷணமென்ன இவற்றுக்குக் கடவையாய்"
என்னது-என்னுடையது
என்னலாம்படி
என்னவுமாம் - என்றும் சொல்லலாம்
என்னை விளையக்கடவதோ!
என்னுதல்
என்னென்றால் - என்னவென்றால்
என்னென்னில்-ஏனெனில்

### ஏ

ஏழு, ஏழுலகு
ஏழுலகெயிற்றினில்கொண்ட(னே)வன்
ஏழ், ஏழ்விடை யடங்கச் செற்ற(னே)வன்
ஏறவருகிற-பெருகிவருகிற. 'ரத்நங்களைக் கொழித்து ஏற வருகிற'
ஏறி-'அஞ்சிறைப்பறவை யேறி'
ஏறிடாநிற்பதாய்-பெருகிவருகிற. "ரத்நங்களைக் கொழித்து ஏறிடாநிற்பதாய்"

### ஐ

ஐ-ஐந்து, ஐம்படை
ஐம்படை யங்கையு ளமர்ந்த(னே)னன்
ஐம்பாலோதி
ஐம்பால்-ஐந்து விதம், குணம்
ஐம்புலன்
ஐம்பெரும் பூதம்-பஞ்சமஹாபூதம்
ஐவகை, ஐவகை வேள்வி
ஐவாய், ஐவாயரவு

### ஒ

ஒக்க மறந்தார்-சேர்த்து மறந்தார் 'ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும்...'
ஒட்டற்று-ஸம்பந்தமற்று
ஒட்டு, ஒண், ஒண்கழனி
ஒண்ணாத-முடியாத
ஒத்த-ஈடான "அவளோடொத்த ப்ராப்தியும்"
ஒரு, ஒருசிலை, ஒருதனி
ஒருதனி வேழம், ஒருநாள்
ஒருமதி
ஒருமதிமுகத்து மங்கைய ரிருவர்
ஒருமதிமுகம்
ஒருமாண்
ஒருமுறை
ஒருமைப்பட்ட நெஞ்சு-பொருந்தின நெஞ்சு
ஒழிந்த-தவிர்ந்த
ஒழிய-அல்லது
ஒன்றி-பொருந்தி
ஒன்றி நின்று, ஒன்றிய மனம்
ஒன்றினில் ஒன்றிநின்று
ஒன்று

### ஓ

ஓட்டை-மூன்றனுருபு, ஓடு "அவளோட்டை ஸ்பர்சத்தாலே", "உன்னோட்டை ஸ்பர்சத்தாலே"
ஓதி-மயிர்முடி
ஓரப்படாநின்ற-குறையாத
ஓவிற்று-ஓய்ந்தது

### க

கடவ(தான) (து) (வான்) (வை)
கணிசிப்பார்-நினைப்பார். 'இதுவே ஏற்றமாகக் கணிசிப்பார்க்கும் எட்டாத ஸ்வபாவத்தை யுடையவன்'
கண்
கண்களில் மிகுதியாலே-கண்களின் மிகுதியாலே-அதிகமான கண்களாலே.

கண் செறியிட்டாற்போலே-மறைத்தாற்போலே. 'அப் பரப் படங்கலும் கண் செறியிட்டாற் போலே பெருத்திருக்கிற.' கண்-இடம், செறிதல்-நெருங் குதல், இடம் நெருங்கின. 'குழாயை மூடினாற்போலே' என்று அரும்பதம்.

கண்டவாளி-காதணி. "காதும் கண்டவாளியும்", "பின்னும் பிறகுவாளியும்"

கண்டுகொள்வது

கண்வளர்ந் தருளுகை

கரு(மை)

கருந்துத்தி-கருப்புப் புள்ளி

கரைபுரண்ட ஆபத்து

கலவி

கழஞ்சு-12 பணவிடை

கழஞ்சு மண் - கழஞ்சு அளவுள்ள மண். சிறுநிலமென்று குறைவாகச் சொல்லுகை.

கழற்றின-போக்கின. 'கல்மஷம் கழற்றின பூர்ணசந்த்ரன்'

கழற்றுகை-போக்குகை. "புதுப் புடவையை அழுக்குக் கழற்றுமாப்போலே"

கழனி-நீர்நிலம். "ஒண்கழனி, செந்நெலொண்கழனி"

கழித்துக்கொள்ளப்போகாது-போக்கமுடியாது

கழித்துத் தரவேணும்-போக்கித் தரவேணும்.

களைபரிப்பான்-இடர்நீக்குமவன்

கற்போர் புரிசை - வித்வான்கள் வஸிக்கும் ஊர்

கனகமாளிகை-பொன்மாளிகை

கனகம்-தங்கம்

காட்டரண்-வநதுர்க்கம்

காட்டிக்கொடுக்க-காட்ட

காதும் கண்டவாளியும்

காரணம்

காலத்து 'ஜகத்து ப்ரளயங் கொண்ட காலத்து'

கால்-நுனி

கிடப்பன-கிடக்கின்றன

கிடாய், கிடீர் முன்னிலை ஒருமை, பன்மை. 'கிடு' பகுதி.

கிழாய், கிழாயார், கிழாயான்-சிரேஷ்டன்

கிளிய-மறைக்கிற. "மேருவைக் கிளிய மேகம்"

கீறிப்பொகட்டான்

குடந்தை-'செல்வம் மல்கு தென் திருக்குடந்தை'

குடந்தை யந்தணர்

குணம்

குலைய - கலைய. "அரைகுலையத் தலைகுலைய"

குளவிக்கூடுசேர்ந்தாற்போலே சேர்ந்து

குன்றுமதுமலர்ச் சோலை

கூடாமையாலே - கிடைக்காமையாலே. 'அது அங்கே யொழியக் கூடாமையாலே'

கூந்தல் 'அறுபதமுரலுங் கூந்தல்'

கூறிய அறுசுவைப் பயன்

கை

கைக்கூட்டன்-காவற்காரன்

கைபுகுந்தாயாய் இராய்

கைபுகுராததொன்றுமில்லை

கைபுகுருகை-ஸித்திக்கை

கையுளமர்ந்தனை

கொடி-துவஜம் "நிமிர்கொடி"

கொடிக்கால் - வெற்றிலைத்தோட்டம்
கொடிப்படப்பை-வெற்றிலைத் தோட்டம்
கொடுபுக்கு-கொண்டுபுகுந்து
கொடுபோகைக்காக
கொடுபோவார்
கொடுப்புதி-கொடுப்பாய்
கொண்ட
கொண்(டனை)டான்
கொண்டு
கொழித்து - 'ரத்நங்களைக் கொழித்து எறவருகிற'
கோடி-நுனி
கோட்சொல்லாநின்ற-அறிவிக்கிற

ச

சடை(யோன்)
சமயம் - மதம். "அறுவகைச் சமயம்"
சிலை-வில்
சிறை
சிறைப் பறவை - சிறகே சிறப்பாக வுள்ள பறவை, சிறையிலகப் பட்ட பறவை.
சிறையிட்டு வைக்க நினைத்து - சிறையிலே வைக்க நினைத்து
சுடர், இருசுடர்
சுடர்விடு மைம்படை
சுட்டுப்பொகட்டாய்
சுந்தரநால்தோள் - அழகாயுள்ள நாலுதோள்
சுந்தரம்-அழகு
சுவை - 'அறுசுவை'
சுவைப்பயன்
சுற்றிலே உடைத்தாய் - சுற்றிலும் உடைய
சூழும் - நாற்புறமும். 'தாமரை சூழும் மலர்ந்த'
செங்கண்
செந்நெலொண்கழனி
செப்பு-தாம்பிரம்
செப்பேடு - தாம்பிரப் பட்டயம். செப்பு ஏடு. தாம்ரசாஸநம். எழுத்துள்ளது ஏடு, எழுத்தில்லாதது வெறும் தகடு. செப்புத் தகடு.
செம்-செம்மை
செய்யலாவதன்றே - செய்ய முடியாதது.
செய்யும் 'அவன் கார்யம் செய்யும்'
செய்வானாகப் பார்த்தான்-செய்ய விரும்பினான்.
செல்வம்
செல்வம் மல்குதென் திருக்குடந்தை
செவி 'நால்வாய் மும்மதத் திருசெவி'
செறுத்து-அடக்கி 'அகத்தினுட்'
செற்றனை(றான்) - 'எழ்விடையடங்க...'
சொல்லக்கடவதிறே
சொல்லுவர்கள்- ...வார்கள்
சோலை
சோறிடுவார்- ...டுகிறவர்கள்

த

தகண்-தழும்பு
தகணேறின 'இரப்பிலே...'
தகும்-மேதகும் ஐம்பெரும்பூதம்
தடங்கொண்ட தாமரை

தடம்-கரை
தண், தண்ணியர்-தாழ்ந்தவர்
தண்பூங்குடந்தை
தந்தாம், தந்தாமுடைய
தரவேணும்
தலைக்கட்டுகை-முடிக்கை
தவிசு-ஆஸநம். 'இருமலர்த் தவிசு'
தழல்
தழலுமிழ்வாய்
தனி, தனிவேழம்
தன்மை, தன்மைப்பெருமை-தன் பெருமை
தாமரை
தாமரைசூழும் மலர்ந்த தண்பூங் குடந்தை
தாராதே - தராமல். 'காலும் நடை...'
திகழ், திகழ்வனம்
திசை 'நாற்றிசை'
திரு 'திருக்குடந்தை'
திருக்குழல்கற்றை
தீ 'முத்தீ'
தீர்த்தனை(தான்)
துத்தி-பொட்டு. 'கருந்துத்தி'
துயில்
துயிலமர்ந்தனை(தான்)
துவக்கும்-தடைபண்ணும்
தூங்குதொட்டில்-ஆடுகிற தொட்டில்
தென் திருக்குடந்தை
தொழில், தொழிலந்தணர் 'அறுதொழி...'
தோள் 'சுந்தரநாற்றோள்'
தோற்றாதே-தெரியாமல். "கண்ணும் தோற்றாதே காலும் நடை தாராதே..."

## ந

நடத்திக்கொடுப்புதி - நடத்திக் கொடுப்பாய்.
நடுங்க 'நாற்றிசை நடுங்க'
நலிகிறது
நாலு
நால், நால்திசை, நால்தோள், நால்வகை, நால்வாய்
நால்வகை வருணம்
நால்வாய் மும்மதத் திருசெவி ஒருதனிவேழம்
நாற்றிசை
நாற்றோள்
நானிலம்
நான்மறை
நிமிர் 'நிமிர்கொடி'
நிலம்-நானிலம், நீர்நிலம்
நிலை 'அறிவருநிலை'
நிற்கிறாயும் நீ-நிற்பவனும் நீ
நின்(றனை)றான்
நின்று
நின்றும்
நின்னீரடி
நீ
நீர் 'முன்னீர் வண்ணன்'
நீரரண்-ஜலதுர்க்கம்
நீர்நிலம்
நீர்ப்புழு
நீர்மடு 'இருநீர்மடுவுள் தீர்த்தனை'
நீர்மை-ஸௌலப்யம்
நீர்மைக்கு எல்லையான இடம்
நீர்வண்ணன்
நூல் 'புரிநூல், முப்புரிநூல்'
நெஞ்சம் 'இடங்கொண்ட நெஞ்சத் திணங்கிக் கிடப்பன'
நெய்தல் நிலம்

நெரித்தாய் ‘ ஊட்டியாக... ’
நெல் ‘ செந்நெல் ’
நெறி, நெறிமுறை
நெறிமுறை நால்வகை வருணம்
நேர்கொடுநேரே பூசலிலே நின்று-
நேருக்கு நேராக...
நோவுபாடு-நோவு, நோய். ‘ எளிய
ராயிருப்பார் நோவுபட்டாற்
போலன்றிறே இதினுடைய
நோவுபாடு ’

ப

பக்கல்-இடத்தில்
படங்கொண்ட பாம்பு
படப்பை - தோட்டம். “ வண்
கொடிப் படப்பை ”
படி-இருந்தபடி, ஸாதித்தபடி
படுகாடு - வெட்டிவிழுந்த காடு,
அசையாமலிருக்கையைச்
சொல்லுகிறது.
படுகாடு கிடப்பர்கள் - படுகாடு
போல அசையாமலிருப்பார்கள்
படை-ஆயுதம்
பட்டர்
பணிவன்-பணிகிறேன்
பண்டை-முன்பு
பண்டையிலும் இரட்டி - முன்னி
லும் அதிகம்
பதம்-அறுபதம்
பத்தும் பத்தாக-பூர்ணமாக
பயன் ‘ அறுசுவைப் பயன் ’
பரமன் ‘அறிதுயிலமர்ந்த பரமன்’
பரிப்பான் ‘ களை... ’
பள்ளிகொண்டான் ‘ பாம்
பணைப்... ’
பறவை ‘ அஞ்சிறைப்... ’
பற்றி ‘ உபாயமாகப் பற்றி ’
பாம்பணை
பாம்பணைப் பள்ளிகொண்டான்
பாம்பு, பாரிப்பு
பாலைநிலம்
பால்திரள்
பிச்சேற்றவல்ல-மயக்கவல்ல
பிடார்-பெருமை
பிராட்டி-பிரானுக்குப் பெண்பால்
பிறப்பறுப்(பு)போர்
பிறப்பு
பிறை ‘ இளம்பிறை ’
பிறைவாய்ப்பு
பின்பு-ஆனபின்பு
பின்னை - “ அது பின்னை நம்மால்
செய்யலாவதன்றே ”
புக
புதுமை
புகுகிறது - என்ன மிறுக்குப்
புகுகிறதோ !
புரி ‘ புரிநூல், முப்புரிநூல் ’
புரிசை-நகரி, மதிள். ‘ கற்போர்
புரிசை ’
புரிநூல்
புலன் ‘ ஐம்புலன் ’
புனல் ‘ வருபுனல் பொன்னி ’
புனல் பொன்னி
பூ, பூங்குடந்தை
பூசல்-சண்டை, போர்
பூதம், பூமிப்பிராட்டி
பெரியகிழா(ய்)(யார்)(யான்)
பெரியதிருவடி-கருடன்
பெரியபிராட்டியார்-லக்ஷ்மி
பெரு(மை)
பெருகிவாராநின்றதிருப்பொன்னி
பெருமதிப்பரான இந்த்ராதிகள்
பெரும்பூதம்
பேருந்தி

பேர்-பெரிய
பொகட்டாய் ‘ சுட்டு... ’
பொதி-‘ஆறுபொதி சடையோன்’
பொதி சடை
பொருள்
பொழுது ‘ முப்பொழுது... ’
பொன்னி ‘ வருபுனல்... ’
பொன்னித்தடம்
போகாது-முடியாது
போக்கடி-போக்கு, கதி, போகைக்கு அடி, போக்கிடம் என்றபடி
போக்கித் தரவேணும்
போம்படி

ம

மங்கையர், மங்கையரிருவர்
மடு ‘ நீர்மடு, இருநீர்மடு ’
மணி ‘ மாமணி ’
மதம் ‘ மும்மதம் ’
மதி, மதிமுகத்து மங்கையர்
மதிமுகம்
மதிள் ‘ மும்மதிள் ’
மதிளிலங்கை
மது ‘ குன்றுமது ’
மதுமலர்
மதுமலர்ச் சோலை
மந்திரமொழி ‘ அந்தணர்... ’
மந்திரம்
மயிர்முடி
மருதம்-மருதநிலம்
மலர் ‘ மதுமலர் ’
மலரன அங்கை
மலர்ச்சோலை
மலர்த்த்விசு
மலர்ந்த தண் பூ
மலையரண்-கிரிதுர்க்கம்
மல்கு ‘செல்வம் மல்கு தென் திருக்குடந்தை’
மறை-வேதம், நான்மறை
மனம் ‘ ஒன்றிய மனம் ’
மாமணி
மார்வு ‘ மானுரியிலங்கு... ’
மிடுக்கன் ‘ ...ஞன ஆனே ’
மிடுக்கு
மிறுக்கு-ஆபத்து
மீதினில், முக்கண், முத்தீ, முப்பொழுது, மும்மதிள்
முகம் ‘ மதிமுகம் ’
முகம்-மூலம் ‘ அவள்முகமாக ’
முகமலர்ந்து போம்படி
முக்கண் நால்தோள் ஐவாயரவோடு ஆறுபொதி சடையோன்
முக்குணம்
முத்தீ
முத்தீ நான்மறை ஐவகைவேள்வி அறுதொழிலந்தணர்
முப்புரி நூல்
முப்புரி நூலொடு மானுரியிலங்கு மார்வு
முப்பொழுது
மும்மதத் திருசெவி ஒருதனி வேழம்
மும்மதம்
மும்மதிள் இலங்கை
முரலும்
முல்லைநிலம்
முறை ‘ ஒருமுறை, நெறிமுறை ’
முன்னுக - “ அவன் முன்னுகப் பற்றுவது ”
முன்னீர் ‘ முன்னீர் வண்ணன் ’
மூ, மூவடி, மூவுலகு
மூன்று
மே-மேவுகை
மேதகும் ‘மேதகு மைம்பெரும் பூதம் ’
மொழி ‘ மந்திரமொழி ’

## வ

வகை 'ஐவகை, நால்வகை'
வணங்க, வணங்கும்
வணங்குந் தன்மை-வளையுந் தன்மை
வண், வண்கொடிப் படப்பை
வண்ண(ம்)ன் 'நீர்வண்ணன், முன்னீர்வண்ணன்'
வந்தவாறே
வந்தால் 'பாரதந்த்ர்யத்தில்...'
வருட 'முப்பொழுதும்...'
வருணம் 'நால்வகை...'
வருபுனல்
வருபுனல் பொன்னி
வருமிடர் - மறுபிறப்பு
வருமிடரகல மாற்று
வரும்
வளைய 'இருகால்...'
வனம் 'திகழ்...'
வாங்க-எடுக்க 'கையிலே வில்லை... அமையும்'
வாசி, வாசியற, வாசியில்
வாசியின்றிக்கே
வாய் 'நால்வாய், ஐவாய்'
வாயரவு 'ஐவாயரவு'
வாயாத-வாய்க்கமாட்டாத
வாய்வாளி-வாயாகிற அம்பு, சொல்லம்புபோலே. "ஈரெயிற்றழல் வாய் வாளி"
வாளி-அம்பு 'வாய்வாளி, கண்ட வாளி'
விசும்பு-ஆகாசம்
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ்வாய் படங்கொண்ட பாம்பு
விடம்
விடாய்-தாகம்
விடும் 'சுடர்விடுமைம்படை'
விடை 'எழ்விடை'
விடையடங்கச் செற்(றனை)றான்
விரகு-உபாயம், மார்க்கம், வழி
விரிந்து 'ஒன்றாய் ...நின்றனை'
வினையுண்ட - செயலுற்ற, 'ராஜபுத்ரனோடு வினையுண்ட கைக்கூட்டனுக்கும்...'
வீசிவில்லிட்டு எழுப்பினாலும் எழுப்பப்போகாது-வீசி வில்லிடுகையாவது வில்லிட்டு வீசுகை.
வெண்பல்
வெறும்புறம்-காலியிடம். 'வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியான அழகு." ஆபரணமில்லாமல் வெறும் புறமாயிருக்கச்செய்தே ஆலத்தியெடுத்து கண்டவர்களின் கண்ணெச்சிலை வழித்துப் போக்க வேண்டியிருக்கை.
வேணும்-வேண்டும்
வேண்டா, வேழம் 'ஒருதனிவேழம்'
வேள்வி 'ஐவகை வேள்வி'
வேற்றுநிலம்-வேற்றிடம்
வைத்து 'இருந்துவைத்து, உன்னை வைத்து'
வைத்துக்கொண்டு 'ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்களில் .......ரஜஸ் தமஸ்ஸுக்களைக் கழித்து'

---

குறிப்பு:—இச்சிறு அகராதியிலுள்ள வரிசை முழுவதும் நுட்பமாக ஆலோசித்து அறியத்தக்கது.

164353

## வியாக்கியானச் சொற்களின் சிறப்பு

அடி—(காரணம்) அவையடியாக; ஜகத் ஸ்ருஷ்டிக்கு அடியாக; கர்மங்களடியாக; அடி காணவொண்ணுத.

அடைய — (முழுதும்) ப்ராஹ்மணஜாதிக்கடைய ஆஶ்ரயணீயனுயிருக்கும்.

அத்தனை—மிடுக்குள்ள தசையோடு ஒக்குமத்தனை.

அல்லது—(தவிர) நீயே கழித்துத் தருமித்தனையல்லது; அவன் பார்க்கில் பார்க்குமித்தனையல்லது.

அன்றிக்கே—(தவிர, அல்லது) க்ரமத்தாலே போக்குகையன்றிக்கே; ஸாதநசதுஷ்டயத்தையும் உடையராய், அன்றிக்கே, ஆஹாராதிகளைத் தவிர்த்து......; ஸங்கல்பத்தாலே செய்கை யன்றிக்கே.

ஆதல்—(அல்லது, ஆவது—என்ற பொருளில் வரும் ஈற்றுச்சொல்) அவன் உபாயமென்னுதல்; அவனை உபாயமாகப் பற்றுங்கோளென்று விதியாதல்; அந்யோந்ய ஸம்யோகத்தாலே......ஸங்க்ரமிக்கையினுலே யாதல்; அன்றிக்கே, அதனுடைய குணத்தை பஜிக்கையினுலே யாதல்.

இடம்—(அம்சம், விஷயம்) இதுக்கொரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி கூடாதென்னுமிடம் சொல்லவேணுமோ! அம்பாலே ஸாதிக்கவொண்ணுத இடம் அழகாலே ஸாதித்தபடி சொல்லிற்று. அம்பால் அழிக்கவொண்ணுத இடத்தை அழகாலும் இரப்பாலும் அழியச் செய்தபடி. இவர்க்கு அபிமதம் நாலுமென்னுமிடம் தோற்றியிருந்ததிறே.

இத்தனை—நீயே கழித்துத் தருமித்தனை; அவன் பார்க்கில் பார்க்குமித்தனை; என் கார்யம் செய்து தலைக்கட்டுமித்தனை போக்கி; நீயே விஷயீகரிக்குமித்தனையென்று கருத்து.

இன்றிக்கே—(இல்லாமல்) சக்தனோடு அசக்தனோடு வாசியின்றிக்கே.

ஒக்க, ஒத்த-ஸம்ஸாரத்தையும் பரபமதத்தையும் ஒக்க மறந்தார்; அவளோடொத்த ப்ராப்தியும் இவனுக்கு உண்டு.

ஒண்ணாத—(அடி, இடம்—பார்).

ஒழிந்த—(தவிர்த்த) உன்னையொழிந்த ஸகல பதார்த்தங்களும்.

ஒழிய—(தவிர) நீயே இதுக்கொரு போக்கடி பார்க்கையொழிய; அது அங்கே யொழியக் கூடாமையாலே; அவனையொழிய இவை அறியாதொழிய வேண்டுகிறதென்னென்னில் (இரண்டாவது ஒழிய வார்த்தைப்பாடு); உன்னை யொழிய வேறு ரக்ஷகருண்டோ!

கடவது—பால்திரளை இடக்கடவது காண்! நல்வழி போகக் கடவதாயிருக்கும். என்று சொல்லக்கடவதிறே.

காண்—பால்திரளை இடக்கடவது காண்! தலையும் வடிவும் இருந்தபடி காண்.

கிடாய், கிடீர் (காண் காணீர் என்ற பொருளில்) கயலொடு வாளை—என்று இரண்டு கிடாய் என் காலைப்பற்றி நலிகிறது.

கிடீர்—நீர் இருக்கிறது ஸம்ஸாரத்திலே கிடீர்; நீர் இருக்கிறது ஸம்ஸாரம் கிடீர்; ஸௌகுமார்யத்தை உடைத்தான இடையை உடையவளைக் கிடீர் பிரித்துவைத்தது.

கொண்ட—ஸம்ஸாரம் கொண்ட என்னை; ப்ரளயம் கொண்ட ஜகத்து: கார்யம் கொண்டதோடு.

கொண்டு—நீ தந்த ஜ்ஞாநம் கொண்டு அறியப் பார்த்தாலும்; அசித்தைக் கொண்டு கார்யம் செய்து; தன்னுயர்த்தியெல்லாம் கொண்டு அறியப்பார்த்தாலும்.

செய்தே—(இருக்க......) ஸர்வமும் ஸர்வப்ரகாரமாயிருக்கச் செய்தே (இருக்கையில் என்று பொருள்).

படி—அழியச் செய்தபடி; கிடக்கும்படி வைத்தாய்; இருக்கும்படியை அருளிச் செய்கிறார்; அமரும்படி தரித்தாய்.

பார்த்தால்—அறியப் பார்த்தாலும்; கார்யம் கொண்டதோடு......கொள்ளப்பார்த்ததோடு; செய்வானாகப் பார்த்தான்; ஆற்றப்பார்த்தான்.

பின்பு—இங்ஙனே யிருந்தபின்பு; ஆனபின்பு.

பின்னை—அதுபின்னை நம்மால் செய்யலாவதன்றே.

புக்கு—இலங்கையிலே கொடுபுக்கு; மடுவிலே போய்ப் புக்கு; அண்டபித்தியிலே புக்குச் சேர்ந்த லோகங்கள்.

பொருள்—நான் என் கார்யம் செய்து தலைக்கட்டுகை யென்றொரு பொருளுண்டோ! நான் உன்னை அறிகை யென்றொரு பொருளுண்டோ! நானொன்று செய்து உன் னைப் பெறுகை யென்றொரு பொருளுண்டோ.

போகாது, போகாமை—(முடியாது). வீசி வில்லிட்டு எழுப்பினாலும் எழுப்பப்போகாது; என்னால் கழித்துக் கொள்ளப்போகாது; அங்கே தரிக்கப்போகாமையாலே.

வாசி—(வித்தியாசம், விசேஷம்) சேதநரான வாசியில் பெறுகிற ஏற்றம்; இட்டபோதோடு இடாதபோதோடு வாசியற; வாசி பார்த்துத் தரவேண்டாவோ!

வினைச்சொற்கள்:

அழியச்செய்தான்; அறியாதொழிய வேண்டுகிறது; அறிவிக்கிறாராயிருக்கிறது. அறுதியிட்டிருக்கையாயிற்று.

ஆகாய்; ஆற்றப் பார்த்தார்; இராய்; இருக்கும்; இருந்ததீ.

உடையனாயிருக்கும்; உண்டாக்கினானாயிற்று; உண்டு. (அசித் ஸாம்யமுண்டு). ஒக்கும், ஒவிற்று; கண்டுகொள் வது; கழித்துக்கொள்ளப் போகாது; கழித்துத் தர வேணும். காட்டிக்கொடுப்பார்; கீறிப்போகட்டான்; கைபுகுராததொன்றுமில்லை; கொடுப்புதி.

சுட்டுப்பொகட்டாய்; செய்யலாவதன்றே. செய்வா னாகப் பார்த்தான்; சொல்லிற்றாயிற்று.

தரித்தார்; தீர்த்தாய், துவக்கும். நடத்திக்கொடுப் புதி. நலிகிறது; நோவுபடுகிறீர்.

போக்கவேணும்; போக்கித்தரவேணும். வழிகாட் டிக்கொடுபோவார்.

வைத்து—உன்னை வைத்து வேறொன்றை இரங் தார்க்கோ நீ கார்யம் செய்வது. ஷட்ரஸங்களினுடைய ப்ரயோஜநமாயிருந்து வைத்து. (இது வார்த்தைப்பாடு).

# திருமங்கையாழ்வார்—திருவெழுகூற்றிருக்கை

1. ஒரு பேருந்தி இருமலர்த்தவிசில் *
2. ஒருமுறை அயனை ஈன்றனை ;*—ஒருமுறை
3. இருசுடர் மீதினிலியங்கா* மும்மதி
4. ளிலங்கை இருகால்வளைய* ஒருசிலை
5. ஒன்றிய ஈரெயிற்றழல்வாய் வாளியி
6. லட்டனை ;*—மூவடி நானிலம் வேண்டி *
7. முப்புரி நூலோடு மானுரி யிலங்கு
8. மார்வினில்* இருபிறப்பொரு மாணாகி *
9. ஒருமுறை ஈரடி மூவுலகளந்தனை ;*—
10. நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை
11. ஏறி* நால்வாய் மும்மதத் திருசெவி
12. ஒரு தனிவேழத்தரந்தையை* ஒருநாள்
13. இருநீர் மடுவுள் தீர்த்தனை ;*—முத்தீ
14. நான்மறை ஐவகை வேள்வி* அறுதொழி
15. லந்தணர் வணங்கும் தன்மையை ;* —ஐம்புல
16. னகத்தினுட் செறுத்து* நான்குடனடக்கி
17. முக்குணத் திரண்டவை அகற்றி* ஒன்றினில்
18. ஒன்றிநின்று* ஆங்கிருபிறப் பறுப்போர்
19. அறியும் தன்மையை ;*—முக்கண் நால்தோள்
20. ஐவாயரவோடு* ஆறுபொதி சடையோன்
21. அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை ;*—
22. ஏழுலகெயிற்றினில் கொண்டனை ;*— கூறிய
23. அறுசுவைப் பயனுமாயினை ;*—சுடர்விடும்
24. ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை ;*—சுந்தர
25. நால்தோள் முன்னீர் வண்ண !* நின்னீரடி
26. ஒன்றிய மனத்தால்* ஒருமதி முகத்து
27 மங்கையர் இருவரும் மலரன* அங்கையில்
28. முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை *—
29. நெறிமுறை நால்வகை வருணமாயினை ;*—
30. மேதகு மைம்பெரும் பூதமும் நீயே ;*

## திருஞானசம்பந்தர்—திருவெழுகூற்றிருக்கை

### [தேவாரத்திலுள்ளது]

திருப்பிரமபுரம்]    பண்—வியாழக்குறிஞ்சி    [பதிகம் 128

ஓருருவாயினை ;—மானாங்காரத்
தீரியல்பாய் ஒருவிண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடரும்பர்கள் பிறவும்
படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திக ளாயினை ;—
இருவரோ டொருவனாகி நின்றனை ;—
ஓரானிழ லொண் கழலிரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை ;—நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதியரவமோ டொருமதி சூடினை ;—
ஒருதாள் ஈரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை ;—காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி ஈடழித் துரித்தனை ;—
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை அறுத்தனை ;—
ஐம்புலனாலா மந்தக்கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ;—ஒருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து, முப்பொழுது குறைமுடித்து,
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்து, ஆறங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் [1] பேணினை ;—
அறுபத முரலும் வேணுபுரம் [2] விரும்பினை ;—
இகலியமைந்துணர் [3] புகலி யமர்ந்தனை ;—
பொங்கு நாற்கடல்சூழ் [4] வெங்குரு விளங்கினை ;—
பாணி மூவுலகும் புதைய மேண்மிகுந்த
[5] தோணிபுரத் துறைந்தனை ;—தொலையா இருநிதி
வாய்ந்த [6] பூந்தரா யேய்ந்தனை ;—

அறுபதமுரலும் கூந்தல் காரணம் *
ஏழ்விடையடங்கச் செற்றனை ; *—அறுவகைச்
சமயமும் அறிவருநிலையினை ; * —ஐம்பா
லோதியை ஆகத்திருத்தினை ; *—அறமுதல்
நான்கவையாய் மூர்த்திமூன்றாய் *
இருவகைப்பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை ; * ——குன்றாமதுமலர்ச்சோலை
வண்கொடிப்படப்பை * வருபுனல் பொன்னி
மாமணி அலைக்கும் * செந்நெலொண் கழனித்
திகழ்வனமுடுத்த * கற்போர் புரிசை
கனகமாளிகை * நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் * !! செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை * அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க * ஆடரவமளியில் அறிதுயி
லமர்ந்த பரம ! * நின்னடியிணை பணிவன் ;
வருமிடரகலமாற்றோ வினையே.

---

## தமிழ்த் திருநாள்

திருவெழுகூற்றிருக்கை என்பது தேராக அடுக்கவல்லதொரு பாட்டு; முதலிலேயே ரதபந்தமாக சித்திரித்திருப்பதைப் பாருங்கள்

ஸ்ரீரங்கத்தில் பெருமாள் புறப்பட்டு திருத்தேரில் எழுந்தருளும்போது தேர்ச்சித்திரமாயுள்ள திருவெழுகூற்றிருக்கையை அத்யாபகர்கள் சேவிப்பார்கள். ஒவ்வொரு உத்ஸவத்துக்கும், பூஜைக்கும், தமிழ்ப் பாட்டுக்களே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நம் தலைவர்கள் இப்போதாகப் புத்துணர்ச்சியோடு நாடெங்கும் நடத்துகிற தமிழ்த் திருநாள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழ்வார்களால் அரங்கமாநகரில் ஆரம்பிக்கப்பட்ட தோன்றாயிற்று.

அழகியமணவாளன் வேதங்களைப் போகிறபோக்கிலேயாக்கி, தமிழ்ப்பாட்டுக்களையும், வியாக்கியானங்களையும், பெரிய திருமண்டபங்களில் அமர்ந்து கேட்டு, ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் கௌரவிப்பதே திருவரங்கம் திருப்பதிக்கேற்ற திருநாளாயிருக்கிறது.

கல்வியை உள்ளீடாகக் கொண்ட கோயில்கள் கல்வியறிவில்லாதார் கையிலகப்பட்டு, கல்வியும் கற்கோட்டையும் தகர்ந்து துகளாய் மடிகின்றன.

[7]வரபுர மென்றுணர் [8]சிரபுரத் துறைந்தனை ;
ஒருமலை யெடுத்த இருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை ;—[9]புறவம் புரிந்தனை ;—
முந்நீர்த் துயின்றோன் முகனறியாப்
பண்பொடு நின்றனை ;—[10]சண்பை யமர்ந்தனை ;—
ஐயுறு மமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் [11]காழி யமர்ந்தனை ;—
எச்ச னேழிசையோன்[12] கொச்சையை மெச்சினை;—
அறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை ;—
இருமையி னொருமையும் ஒருமையின் பெருமையும்
மருவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்
அனைய தன்மைய னாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே.

குறிப்பு:—பிரமபுரமுதலாப் பன்னிரண்டும் சீர்காழிக்கே பெயராகும்.

## எழுகூற்றிருக்கை இலக்கணம்

மாறனலங்காரம் 297, 298, 299 வது ஸூத்ரங்களில் இந்த இலக்கணம் காண்கிறது.

"ஒன்று முதலா ஓரேழீறாச்
சென்ற எண்ணீரேழ்நிலந்தொறும்திரிதர
எண்ணுவதொன்றும் எழுகூற்றிருக்கை" —297

இலக்கண இலக்கிய நுட்பத்தை விளக்கிக்காட்ட இங்கே இடமில்லை. மாறனலங்காரக்காரர் "ஒரு தனித்திகிரியின்" என்று ஒரு எழுகூற்றிருக்கை பாடிக் காட்டுகிறார். அவருடைய எல்லா உதாஹரணமும் நம்மாழ்வாரைப்பற்றிய பாடலாகையால் இதுவும் 'குருகாபுரி வரோதய' என்று அவரையே சொல்லுகிறது. உடையவரை ஆட்கொண்ட ஆழ்வார் தன்னையும் அருள்புரிந்தாண்டதற்குக் கைம்மாறு காணேனென்று அலங்காரக்காரர் கலங்குகிறார்.

திருமங்கையாழ்வார் 46 வரி, திருஞானசம்பந்தர் 47 வரி, அலங்காரக்காரர் 51 வரி—பாடியிருப்பதால் இப்பாட்டுக்கு வரிக் கணக்கு முக்கியமில்லை.

வியாக்கியானத்திலுள்ள

## வடமொழித் தொடர்கள்

அசித்கல்பம்
அசித்ஸம்யோகம்
அசித்ஸாம்யம்
அண்டபித்தி
அதிகசக்தன்
அதிசயிதஜ்ஞாநர்
அத்யயநம் அத்யாபநம்
அத்விதீய காரணம்
அநந்யபோகரஸம்
அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர்
அநாஶ்ரிதரான பாஹ்யர்
அநிஷ்டநிவாரணம்
அநுபவம் அவிச்சிந்நமாகவேணும்
அந்யோந்யஸம்யோகம்
அய:பிண்டம்
அர்த்தித்வாதி நிரபேக்ஷம்
அவிஜ்ஞேயஸ்வரூபம்
அவித்யாகர்மவாஸநாருசி
அஹமபிமாநம்
ஆத்மவஸ்து
ஆதி வ்யாதி நிவ்ஷித்தாநுஷ்டாநம்
ஆந்தராளிகர்
ஆபத்ஸகன்
ஆவஹநீயாக்நி
ஆஶ்ரிதவிரோதிநிரஸநம்
ஆஶ்ரிதஸம்ரக்ஷண ப்ரகாராநுஸந்தாநம்
ஆஹாரநித்ராபயமைதுநங்கள்
இதரவிஸஜாதீயம்
இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவாரணம்
ஈஶ்வரமர்மஜ்ஞை
ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்து
உச்ச்வாஸ நிஶ்வாஸங்கள்
உத்க்ருஷ்டவர்ணம்
உத்பத்திவிநாசாதிகளுக்குக் கர்மீபவிக்கிற ஸகலசேதநர்க்கும்
உபாயாந்தரநிஷ்டர்
ருக்யஜுஸ் ஸாமாதர்வணங்கள்
ருஜீஷாம்சம்
ஐஶ்வர்ய ஸௌந்தர்யங்கள்
கரணகளேபரவிதுரம்
கரணத்ரயம்
கர்மயோகம்
காரணாவஸ்தை
காளமேகம்
க்ருஷ்ணாஜிநம்
கார்ஹபத்ய அவஹநீய தக்ஷிணாக்நிகள்
கிரிதுர்க்கம்
குணத்ரயம்
குணாதாநம்
சக்ஷுராதீந்த்ரியங்கள்
சதுர்முகனை அதிஷ்டித்து நின்று
சந்த்ரஸூர்யர்கள்
சந்த்ராதித்யர்கள்
சாதுர்வர்ண்யம்
ஜகதாரம்பகமான பூதபஞ்சகம்
ஜகத்ரக்ஷணத்திலே அவஹிதன்
ஜகத்ரக்ஷணாநுரூப யோகநித்ரா
ஜந்மவ்ருத்தாதிகள்
ஜலதுர்க்கம்
ஜலஸம்ருத்தி

ஜ்ஞாநாதிகர்
ஜ்ஞாநாதிகனான சதுர்முகன்
தந்மாத்ரை
தமஶ்ஶப்தவாச்யம்
தமோபூதம்
த்ருதீயவிபூதி
த்ரைலோக்யம்
த்வநுபவவிரோதி ஸம்ஸாரம்
தூக்ஷிணுக்தி
தாநம் ப்ரதிக்ரஹம்
திவ்யதேசம்
துர்பலன்
தேவயஜ்ஞம்
தேவாதிகார்யங்கள்
தேஹாரம்பகங்களான மஹா
பூதங்கள்
யர்மார்த்த காமமோக்ஷங்கள்
நாமரூபவிபாகாநர்ஹம்
நித்யவஸந்தம்
நிரதிசயஸம்பத்
நிர்வதிகதயை
நிர்ஹேதுகக்ருபை
நிஷ்க்ருஷ்டஸத்வம்
பஞ்சாயுதம்
பரமபதம், பரமாணு
பரிஹாரம், பரோக்ஷம்
பரார்த்தயஜநம்
பித்ருயஜ்ஞம்
புண்யபாபரூப கர்மங்கள்
புருஷகாரம்
பூர்ணசந்த்ரன்
ப்ரதிகோடி
ப்ரபலப்ரதிபந்தகம்
ப்ரயோஜநாந்தரபரரான இந்த்
ராதிகள்
ப்ரவாஹரூபேண நித்யம்
஬ஹுபரிகரன்
பாஹ்ய ஸமயம்
ப்ரஹ்ம யஜ்ஞம்
ப்ரஹ்மருத்ராதிகள்
ப்ரஹ்மஸ்ருஷ்டி
ப்ராஹ்மணஜாதி
ஹவார்ணவம்
பூதயஜ்ஞம்
போக்யபூதா
மதுபாநமத்தம்
மதுபாநார்த்தம்
மநுஷ்ய யஜ்ஞம்
மநோபுத்தி சித்தாஹங்காரங்கள்
மநோவாக்காயங்கள்
மஹாதுঃகம்
மஹாபலி
மஹார்க்கமான ரத்நம்
மஹாவராஹம்
யஜநம் யாஜநம்
யஜ்ஞோபவீதம்
ரக்ஷணப்ரகாரம்
ரஜஸ்தமஸ்ஸுக்கள்
ரஹஸ்யமான ஸூக்தங்கள்
ராஜபுத்ரன்
லலாடநேத்ரன்
வநதுர்க்கம்
வர்ணஸ்ருஷ்டி
வாமநவேஷம்
விபூதித்வயம்
விஶேஷரக்ஷணம், விஸஜாதீய ஜந்
மாவான சதுர்முகன்
வேதாந்த ஸூத்ரங்கள்
வ்யங்யோக்தி
ஶங்காபரிஹாரங்கள்
ஶப்தாதிவிஷயங்கள்
ஶாஸ்த்ரமர்யாதை
ஶ்ரமஹரம்
ஸ்ரீய:பதித்வம்

ஸ்ரீவாமநன்
ஸ்ரீஶார்ங்கம்
ஶ்ரேஷ்டவாசகம்
ஷட்கர்மம்
ஷட்ரஸரூபப்ரயோஜநம்
ஸகலபதார்த்தங்கள்
ஸச்சப்தவாச்யன்
ஸம்ஶ்லேஷப்ரதிபந்தம்
ஸம்ஶ்லேஷவிரோதி
ஸம்ஸார து:கம்
ஸம்ஸாரஸ்வபாநுஸந்தாநம்
ஸம்ஸாரி து:கம்
ஸர்வகாலமும்
ஸர்வஜ்ஞன்
ஸர்வப்ரகாரம்
ஸர்வஶக்தி
ஸர்வஸமாஶ்ரயணீயன்
ஸவாஸநமாக
ஸாதநசதுஷ்டயம்
ஸாதந பரிக்ரஹம்
ஸாதநாந்தர பரிக்ரஹம்
ஸாமாந்யரக்ஷணம்
ஸாம்ஸாரிகவ்ருத்தம்
ஸுகது:கங்களுக்கு நியாமகன்
ஸூக்ஷ்மரூபேண
ஸ்ருஷ்டிகாலம்
ஸ்வதஸ்ஸித்தம்
ஸ்வரூபாநுரூபம்
ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்கள்
ஹேதுபூதன்


## ப்ரமாணங்கள்

164353


| தமிழ் : | | பக்கம் |
|---|---|---|
| திருக்குறுந்தாண்டகம் | ... | 8 |
| திருமொழி | ... | 17 |
| திருவிருத்தம் | ... | 27 |
| நாச்சியார் திருமொழி | ... | 20 |
| முதல் திருவந்தாதி | ... | 9, 13 |
| **ஸம்ஸ்க்ருதம் :** | | |
| சாந்தோக்யம் | ... | 30 |
| ஜிதந்தே | ... | 10 |
| பகவத்கீதை | ... | 26, 27 |
| ராமாயணம் | ... | 26, 27 |
| விஷ்ணுதர்மம் | ... | 19, 20 |
| விஷ்ணுபுராணம் | ... | 27, 29 |
| ஸ்ரீபாஷ்யம் | ... | 22 |
| ஸஹஸ்ரநாமம் | ... | 20 |
| ஸ்தோத்ரரத்நம் | ... | 9, 11, 16 |


வவவ:417x1,38
N59

## பார்த்தஸாரதி அய்யங்கார் எழுதின புஸ்தகங்கள்

1. உத்தரகாண்டம்
2. ஸ்ரீரங்க மாஹாத்ம்யம்
3. ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி—தமிழ்த் திருநாள்
4. உறையூர் நாச்சியாரும் பங்குனி உத்தரமும்

**வெளியிட்டவை**

1. கைசிக புராணம்
   (பட்டர் வ்யாக்யாநம்)
2. திருவெழுகூற்றிருக்கை
   (வ்யாக்யாநம் அரும்பதம் முதலியவற்றுடன்)

**Viraraghava Ramanuja Kootam**

of Kalleda Zamindar

Rajasri E. VENKATESVARA RAO,

294, Satara Street,

SRIRANGAM.

திருச்சிஞப்பள்ளி யுனைட்டெட் பிரிண்டர்ஸ் லிட்., திருச்சி.

8A
3-90